Registered in Ceylon as a Newspaper

VOUCHER COPY

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily — தேசிய தினசரி

போன்: 389 — தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 — யாழ்ப்பாணம் — சுபகிருது சித்திரை 26 ஆம் நாள் — துல்ஹஜ் 4 — (9-5-62) — புதன்கிழமை — இதழ் 87




# இலங்கையர்கள்தான்

# பத்திரிகை நடத்தலாம்

## மந்திரிக்கு ஆலோசனை கூற ஐவர் சபை

## பத்திரிகை மசோதா நகல் விபரம்

கொழும்பு, செவ்வாய்

பத்திரிகை மசோதாவின் கீழ் மந்திரிக்கு ஆலோசனை கூற 5 பேரடங்கிய ஒரு சபை நிறுவப்படவிருக்கிறது. கவர்னர்ஜெனரல் இவர்களை நியமனம் செய்வார். 15 பேரடங்கிய பத்திரிகை சபை (பிரஸ்கவுன்சில்) ஒன்றும் அமைக்கப்படும்.

பத்திரிகைகளை நடத்தும் முறை, பத்திரிகைகளைத் தற்காலிகமாகத் தடைசெய்வது அல்லது முற்றாக நிறுத்திவிடுவது போன்ற விஷயத்தில் நடவடிக்கை எடுப்பதில் இச்சபை ஆலோசனை கூறும்.

மசோதாவின் சட்ட விதிகளுக்கு எதிராக நடந்துகொள்ளும் பத்திரிகைகள் இவ்வித நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும்.

பத்திரிகைகளை நடத்தவேண்டிய உயரியபண்பு, அவற்றை நிர்வகிக்க வேண்டியமுறை அவை அனுஷ்டிக்க வேண்டிய கொள்கை ஆகியனபற்றியும் சபை ஆலோசனைகூறும்.

டைம்ஸ், லேக்கவுஸ் பத்திரிகைகளைத்தவிர ஏனைய பிரசுரங்களைக் கட்டுப்படுத்த 15 பேரடங்கிய 'பத்திரிகை சபை' ஒன்றும் மந்திரியால் நியமிக்கப்படும்.

மக்களிடையே பரபரப்பை உண்டாக்குவது, வகுப்பு செளஜன்யத்தைக் குலைப்பது, சமய கலவரத்துக்குத் தூபமிடுவது போன்ற விஷயங்களைப் பிரசுரித்து குழப்பத்தை உண்டுபண்ணும் பத்திரிகைகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணைக்குப்பின் குற்றம்கண்டுபிடிக்கப்படுபவைகளுக்கு ரூ.5000 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

மந்திரிசபை செய்திகள், அல்லது மந்திரிகளின் கடந்தகால, நிகழ்கால நடவடிக்கைகள், அரசாங்க இலாகாக்கள் ஆகியன பற்றி, தவறான செய்திகளைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளுக்கு ரூ. 10000வரை அபராதம் விதிக்கப்படலாம்.

இலங்கையர்கள் மட்டும் தான் பத்திரிகை நடத்த முடியும் என்றும், அல்லது குறைந்தபட்சம் 50சத விகிதம் இலங்கையர்களின் பங்கைக் கொண்டே பத்திரிகைகள் நடத்தமுடியும்.

# சிங்கள தகுதிபெறாத அரசாங்க ஊழியர் சம்பள உயர்வை நிறுத்த வேண்டாம் என வற்புறுத்து

கொழும்பு, செவ்வாய்

சிங்களத்தில் தகுதிபெறாத அரசாங்க ஊழியரின் சம்பள உயர்வை நிறுத்தவேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்கும்படி, அரசாங்க லிகிதர் சேவை யூனியன், திறைசேரியின் உதவிக் காரியதரிசியை கேட்டுள்ளது.

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையால் அதிகாரிகள் கவலைகொண்டுள்ளனர் என்று யூனியன் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க லிகிதர் சேவை யூனியனின் இக் கருத்தை அரசாங்கத்திடம் தாம் தெரிவிக்க சம்மதம் கொண்டுள்ளதாக திறைசேரி உதவிக்காரியதரிசி தெரிவித்துள்ளார். நீதிமந்திரிக்கு யூனியன் அனுப்பியுள்ள மற்றுமொரு மகஜரொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு முறை நாங்கள் நீதிமந்திரியுடன் சந்தித்துப் பேசியபின்னர் எங்களது கருத்து அரசாங்கத்திடம்தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் அரசாங்கம் இதுபற்றி முடிவுசெய்யுமென்றும், அறிவிக்கப்பட்டது. நாட்டுக்கு அதிக காலம் நேர்மையுடன் சேவைபுரிந்த அதிகாரிகளுக்கு தண்டனை அளிக்கக்கூடியவகையிலமைந்த இக் கொள்கையை உடனே புனராலோசனை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி யூனியன் தங்களைக் கேட்டுள்ளது.

## காலரியிலிருந்து கைதட்டினர்!

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க பயிர்ச்செய்கை திருத்தமசோதா பற்றி டாக்டர் என். எம். பெரேரா பேசி முடித்தபோது பார்லிமெண்ட்காலரியில் வெள்ளைச்சட்டையும், அரைக் காற்சட்டையும் அணிந்திருந்த ஒரு வெளிநாட்டு வாசி பலமாகக் கரகோஷம் செய்தார். இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்டு அரசாங்க தரப்பிலும் எதிர்க்கட்சியிலுமிருந்த எம். பி.க் கள் சிரிப்பில ஆழ்ந்தனர். யார் கரகோஷம் செய்கிறார்கள் என்பதை அறியும்பொருட்டு எதிர்க்கட்சி எம். பி.க்கள் மேலே பார்த்தனர். சபை சார்ஜண்ட், இந்த நபரை அகற்றும்படி உத்தரவிட்டார். அவர் பொலிஸ் பாதுகாவல் அறைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பின் சபையை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டார். திரு தகநாயகாவிடமிருந்து பிரவேச டிக்கெட்பெற்று, இந்த நபர் காலரிக்குவந்திருந்தார்.

## யாழ்ப்பாண மாநகரசபை:

# விசேஷ கமிஷனரிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க முடியாது

## பெரும்பான்மைக் குழு எதிர்ப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையை விசேஷ கமிஷனர் ஒருவரின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருவதற்குச் சிலர் செய்யும் முயற்சி பயனளிக்கமாட்டாதென்று மாநகரசபை வட்டாரங்கள் அபிப்பிராயம்தெரிவிக்கின்றன. நிர்வாகஊழல், நிர்வாகத்திறமையின்மை ஆகிய காரணங்கள் நிரூபிக்கப்பட்டால்தான் மாநகரசபையைக் கலைத்து அதன் நிர்வாகப் பொறுப்பை விசேஷ கமிஷனரிடம் ஒப்படைப்பதற்கு இப்பொழுதுள்ள சட்டப்படி மந்திரிக்கு அதிகாரமிருக்கிறதென்று சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போதைய மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துநிறைவேற்றிய மாநகரசபையின் 'தற்போதைய' பெரும்பான்மைக்குழுவான ஒன்பது அங்கத்தவர்களும் இன்னும் இரண்டொரு தினங்களில் கூடி அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராயவிருக்கின்றனர்.

மாநகரசபை நிர்வாகத்தை விசேஷ கமிஷனரிடம் ஒப்படைக்கவேண்டுமென்று சிலர் செய்யும் முயற்சிகள் சம்பந்தமாக என்னசெய்யவேண்டுமென்று இவர்கள் ஆலோசனை செய்வர். விசேஷ கமிஷனரிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பதானல் அது முறையற்ற தென்பதை ஸ்தல ஸ்தாபன விடமைப்பு அமைச்சரைச் சந்தித்து எடுத்துக் கூறுவதுபற்றியும் பொதுக் கூட்டங்கள் வைத்து நகரமக்களுக்கு மாநகரசபை நிர்வாகம் பற்றி விளக்கிக் கூறுவது பற்றியும் இவர்கள் ஆலோசனை செய்வார்கள்.

# மூதூர் இடைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி போட்டி

கொழும்பு, செவ்வாய்

மூதூர் இடைத்தேர்தலில் தமிழரசுக் கட்சிசார்பாகப் போட்டியிடும் திரு. முகம்மதலிக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரை நிறுத்தும் எனத் தெரிகிறது. மூதூர் இடைத்தேர்தலில் போட்டியிடுவது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாரத்தில் முடிவு செய்யும். இடைத்தேர்தல்கள் ஜூலை முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது.

லங்கா சமசமாஜ கட்சியின் மத்திய கமிட்டி அடுத்த வாரத்தில் கூடி இடைத்தேர்தல்களில் தங்களது கட்சி சார்பாக அபேட்சகர்களை நிறுத்துவதா அல்லது தங்களது வாக்காளர்களுக்கு எந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுக்கும்படி கூறுவது என்பது பற்றி முடிவு செய்யும்.

இடைத்தேர்தல்களில் சம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்ளாது எனத் தெரியவருகிறது. அநுராதபுரத் தொகுதிக்கும், மூதூர் தொகுதிக்கும்

(8ம்-பக்கம் பார்க்க)

## பார்லிமெண்ட்

# எஸ். எஸ். ஸி. தகுதியும் ஆசிரியர் நியமனமும்

## ராணுவத்தின் செல்வாக்கு பற்றி விசாரணை கமிஷன்

கொழும்பு, செவ்வாய்

இன்று பிற்பகல் பார்லிமெண்ட், உப சபாநாயகர் திரு. ஹியூபெர்னுண்டோ தலைமையில் கூடிய போது அவசரகாலச் சட்டம் மேலும் நீடிக்கப்பட்டிருப்பதாக கவர்னர்ஜெனரலிடமிருந்து கிடைத்த செய்தியை அவர் சபைக்கு வாசித்துக்காட்டினர்.

வளவகங்கை பரிசோதனை அறிக்கையை நீர்ப்பாசன மந்திரியின் சார்பாக திரு. இலங்கரத்ன சபையில் சமர்ப்பித்தார்.

ராணுவப்படைகள், பொலிஸ், அரசாங்கநிர்வாகம், ராஜதந்திர சேவை, பத்திரிகைகள, அரசியல்கட்சிகள், பொதுஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றிலுள்ள செல்வாக்கு பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படுமா என திரு. பீட்டர் கெனமன் கேட்டார்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இதற்குப் பதிலளிக்கையில், இவ்விஷயம் பிரதமரின் கவனத்தில் இருக்கிறதென்று கூறினார். மேலும் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் அடுத்த சிம்மாசனப்பிரசங்கத்துக்கு முன் இத்தகைய விசாரணை நட...

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

இலங்கையில் ஒரு திறமானதும் யாழ்ப்பாணத்தில் மிகப் பெரியதுமான அடைகாக்கும் யந்திரக்கருவி (16000முட்டைகள் அடை. வைக்கக் கூடிய சக்தியுடையது) உதவியுடன் பொரித்த சிறந்த ரகக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்,
மானிப்பாய் வீதி,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

---

### முட்டை அடைவைக்கும் விபரங்கள்

ஆகக் குறைந்தது 10 முட்டைகள் தலா 15 சத விகிதப்படி பொரித்துக்கொடுக்கப்படும். முதல் 100 முட்டைகள் தலா 15 சதவிகிதப்படியும், இரண்டாம் 100 முட்டைகள் தலா 14 சத விகிதப்படியும் மூன்ரும் 100 முட்டைகளும் அதற்கு மேலும் தலா 13 சதம் விகிதப்படியும் பொரித்துக் கொடுக்கப்படும்.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்
மானிப்பாய் வீதி,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

---

### கோழிக் குஞ்சுகள்

உத்தரவாதம் பெற்ற நம்பிக்கையான "வைட் லெக்கோன்" கோழிக்குஞ்சுகள்—ஒவ்வொன்றும் 60 சதம்.

ஏனைய ஜாதிக் குஞ்சுகள் ஒவ்வொன்றும் 70 சதம்.

அவயகூடத்தில் உள்ளூர் விற்பனைக்கு சிறிதளவு குஞ்சுகள்தான் விற்பனைக்கு இருப்பதால் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிருங்கள். 50% முற்பணம் செலுத்தப்படும் ஆடர்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்,
மானிப்பாய் வீதி,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

---

### தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும்

சுலபமாக பஸ்ஸிலேயே வந்து சேரலாம். - நான்காவது மைல் கட்டைக்கருகாமையிலும் ஆனைக்கோட்டை உபதபாற் கந்தோருக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது. மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைக்கோட்டை.

---

'ஒரு நாள்' — குஞ்சுகளை விற்பனை செய்வதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் 'ஏஜண்டு'கள் தேவை.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்,

---

### நெற்காணி தேவை

கிளிநொச்சி, வவுனியா, மன்னாரில் நீர்ப்பாய்ச்சலுடைய பத்து, பதினைந்து ஏக்கர் நெற்காணியும் பனையில் நன்ருய் காய்க்கும் இருபத்தைந்து ஏக்கர் தென்னந்தோட்டமும் நல்ல இடத்தில் விலைக்குத்தேவை. கந்தையா, நூதனசாலை, யாழ்ப்பாணம்.

---

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பட்டினத்தில் பிரதான பஸ் பாதையில் மின்சார முதலிய வசதிகளுள்ள எட்டறை வீடும், கிணறும் தென்னை, மா முதலிய மரங்களுமுள்ள ஐந்துபரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. கனகரத்தினம் 7 பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

---

# தொடையில் பாய்ந்த சன்னம் இருதயத்தில் இருந்த அதிசயம்!

வாஷிங்டன், மே 7

ஒரு நபருக்குச் சுடப்பட்ட துப்பாக்கிச் சன்னம் ஒன்று அவரது இருதயத்தில் இருந்த அதிசயமொன்றை இங்குள்ள வைத்தியர்கள் விபரித்தார்கள்.

52வயதான வாஷிங்டன் மளிகைக் கடை மனேஜர் திரு. ஐவான் மலினேஸ்கி என்னும் இந்த நபரைச் சென்ற பிப்ரவரி மாதத்தில் இவர் தப்பி ஓடமுயன்றபோது ஒருவன் சுட்டான்.

ஜோர்ஜ் டவுண் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் சார்ல்ஸ் கங்ஞகல், டாக்டர் பீற்றர் கொன்ருட் என்பவர்கள் வலது தொடையில் பாய்ந்த சன்னம் உடம்பின் பிரததான நரம்புடன் இணையும் 'பீமெறல்' நரம்பினூடாகச் சென்று இருதயத்தின் கீழ்ப்பாகத்தை அடைந்திருக்கின்றது; என்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்

சுடப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்குள் சன்னம் இருதயத்தைச் சென்றடைந்ததாக டாக்டர்கள் நம்புகிருர்கள்.

சன்னம் 3 மணித்தியால சத்திரசிகிச்சைக்குப் பின்னரே எடுக்கப்பட்டது. திரு. மலினேஸ்கி இதன் பின்பு 2 வாரங்களுக்கு பின்னரே ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பினர்.

இதுபோன்ற 30 சம்பவங்களே இதுவரை வைத்திய சரித்திரத்தில் ஏற்பட்டிருப்பதாகவும், அதில் அதிகமானோர் யுத்த வீரர்கள் என்றும் வைத்தியர்கள் கூறினர்கள். திரு. மலினேஸ்கி வேலைக்குத் திரும்பாவிடிலும் பத்திரிகை நிருபர் மகாநாட்டிற்குச் சமுகமளிக்கக்கூடிய நிலையில் இருக்கிருர்.

## இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து

காத்தான்குடி, செவ்வாய்

மண்முனை வடகிழக்கு வடபிரிவிலுள்ள குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்தின் முதலாவது வினியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திங்கள், வியாழன் ஆகிய இரு நாட்களிலும் வினியோகம் நடைபெற்றது. பெரும்பாலமன குழந்தைகள் நீண்ட தூரம் பிரயாணம் செய்து மருந்தைப் பெறவேண்டி இருக்கிறது.

---

### அறிவித்தல்

230, கே. கே. எஸ். ரோட்டில் இருக்கும்எனக்குச்சொந்தமான கட்டிடத்தில்இருப்போர் எனது அறிவித்தலின்றி வாடகையோ அல்லது அது சம்பந்தமான கொடுக்கல் வாங்கலோ செய்தால் நாம் அதற்கு ஜவாப்தாரியில்லை.

என். திருச்செல்வம்
பிலாப்படை ஒழுங்கை
மானிப்பாய்.

---

### புளியங் கொட்டை தேவை

புளியங் கொட்டை சேகரித்துத் தரக்கூடியவர்களிடம் நாம் ருத்தல் கணக்கில் விலைக்கு எவ்வளவும் எடுக்கத் தயாராயுள்ளோம்.

S. கோணேசலிங்கம்,
159/3, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

---

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல பவியாகளுக்கும் நற்சாட்சிப்த்திரக்திகளடங்கிய கற்றலோங் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

---

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

சுபகிருது ஆண்டுசித்திரைத் திங்கள் 26-ம் நாள் புதன் கிழமை (9-5-62) ஹிஜ்ரிஆண்டு 1381. துல்ஹஜ் மாதம் 4-ம் பிறை.

காலை 6-26 வரை பஞ்சமி. அதன்பின்னர் ஷஷ்டி. இரவு 10-46 வரை புனர்பூசம். அதன் பின்னர் பூசம். சித்தயோகம் இராகுகாலம் 11-54 முதல் 1-24 வரை.

திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

புனர்பூசம்—பூசம்:- தொழில் மேன்மை, பணவரவு, பிரயாணம், ஊழியர்சச்சரவு.

மேடம்: கடும்உழைப்பு,மனக்கவலை, முயற்சிக்கேற்ப ஊதியம், பிரயாணநலம்.

இடபம்: வைத்தியச்செலவு, பெரியோர் உதவி, எதிரிகளால் கஷ்டம், தொழில் நன்மை.

மிதுனம்: முதியோர் பகை, உறவினர் சந்திப்பு,பிரயாணக் கஷ்டம், செய்காரியத்தடை.

கடகம்: சுபகருமம், பணவரவு, தொழிலில் ஊக்கம், மாதாவழி உதவி.

சிங்கம்: போசனசுகம், உடல் நலம், கடும்உழைப்பு, நற்செய்தி.

கன்னி: பணவரவு, கடன் நீக்கம், அதிகஉழைப்பு, முதியோர்நட்பு.

துலாம்: நண்பர்பகை, வீண் பேச்சு, பிரயாணம், அகால உணவு.

விருச்சிகம்: மனச்சஞ்சலம், தொழில் அதைரியம், பணக் கஷ்டம், ஊழியர் இடர்.

தனு: குடும்பசுகம், ஆரோக்கியவிருத்தி, பணவரவு, சுபசெய்தி.

மகரம்: தொழில் நன்மை, ஆதாயம், பகைநீக்கம், குடும்ப சுகம்.

கும்பம்: கடன் தொல்லை நீக்கம், தொழிலபிவிருத்தி, பணவரவு, குடும்பஒற்றுமை.

மீனம்: போசனசுகம், பெரியோர் — இனசன ஒற்றுமை, வாக்குவன்மை.

---

## 'நோயாளர்களுக்கு தவருன மருந்து கொடுக்கப்படுகிறது'

ஹேவாகெற்ற, திங்கள்

"ஹேவாகெற்ற பகுதியிலுள்ள உடுவெல ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் பெண் ஊழியர் (அட்டன்டன்) களுக்கு எழுதவோ வாசிக்கவோ முடியாது நோயாளி ஒருவருக்கு ஒரு மருந்தைக் கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டால், எழுத்தறிவில்லாத அவர்கள் அந்தநோயாளிக்கு வேறு மருந்தைக் கொடுக்கிருர்கள்."

சுகாதாரமந்திரி திரு. ஏ. பி ஜயசூரியா உடுவெல ஆஸ்பத்திரிக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த சமயம், கிராமவாசியொருவர் மேற்கண்ட தகவலை மந்திரியிடம் தெரிவித்தார்.

அந்தக் கிராமவாசி மந்திரியிடம் மேலும் தெரிவித்ததாவது: "ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளருக்கு துணிகள் வழங்கப்படுவதில்லை, ஆஸ்பத்திரியில் நான்கு லந்தர் விளக்குகள் மட்டுமே இருப்பதால் இரவு வேளைகளில் பல நோயாளிகள் தங்களது இராப் பொழுதை இருட்டிலே கழிக்கின்றனர். இங்குள்ள பல நோயாளர்கள் துன்பமடைகிருர்கள்."

---

ஆசிரியருக்கு கடிதங்கள்

## பாஷையூருக்கு பஸ்சேவை தேவை

பாஷையூர், கொழும்புத் துறை பகுதியில் பஸ் சேவை இல்லாததால் இங்குள்ள பிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருக்கிறது.

காரில் செல்ல வசதியில்லாத மக்கள் தாம் விரும்பும் இடங்களுக்கு நடந்தே செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்ருர்கள்.

இங்குள்ள பிரயாணிகளின் கஷ்ட நிலையை உணர்ந்து இ. போ. சபையினர் இப்பகுதிக்கு பஸ் சேவையை ஆரம்பிக்க வேண்டும்.

செ. கதிர்வேலன்,
கன்ஞதிட்டி.

∴ ∴ ∴

## சமய பாடத் திட்டம் மாற்றப்பட வேண்டும்

இப்பொழுது இருக்கும் சமய பாடத் திட்டத்தின்படி சமய பாடப் புத்தகங்களிலுள்ள வேத ஆகமங்கள் கிரியைகள், தீட்சைகள், ஆகியவற்றை படிப்பது மாணவர்களாகிய எம்மால் இயலாத காரியமாக இருக்கிறது.

நன்கு ஆராய்ந்து சமய பாடத் திடடம் தயாரிக்கப்படாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஆசிரியர்கள்கூட விளங்க முடியாதபடி இந்த பாடத் திட்டம் அமைந்திருக்கிறது என்ருல் இதை மாணவர்கள் அறிந்துகொள்வது எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதுபற்றி விளக்கத் தேவையில்லை.

இந்த பாடத் திட்டத்தை மாற்றி மாணவர்களுக்கு ஏற்ற நல்ல பாடத் திட்டத்தை தயாரிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை தயவாக வேண்டுகின்றேன்.

இ. சிவபாதலிங்கம்,
அச்சுவேலி.

---

## இடமாற்றத்தில் தடுமாற்றம்!

புத்தளம், செவ்வாய்

மௌலவி ஜனுப் எம். எஸ். எம். சரீப் சென்ற வருடம் அக்டோபர் 16-ந் திகதி புத்தளம் சென்ற் அன்றூஸ கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவருக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை. ஆனல் இதற்கிடையில் மூன்று முறைகள் மாற்றப்பட்டிருக்கின்ருராம்.

இந்த ஆறரை மாத கால எல்லைக்குள் இவர் நான்கு பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார். அக்டோபர் 16-ந் திகதி புத்தளம் சென்ற் அன்றூஸ கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கிருந்து சேனைக்குடியிருப்பு சென். மேரிஸ் தமிழ் வித்தியாசாலைக்கு இவ்வருடம் பெப்ரவரி 2-ந் திகதி மாற்றப்பட்டார். பின்பு அங்கிருந்து புத்தளம் சாகிராக் கல்லூரி பாலர் பிரிவுக்குமார்ச் மாதம் மாற்றப்பட்டார். மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் கல்பிட்டிய மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக ஏப்ரல் 30-ந் திகதி இவருக்கு அறிவித்தல் கிடைத்தது.

---

## சலவைத் தொழிலாளர் சமாஜ மகாநாடு

திருகோணமலை, திங்கள்

சலவைத் தொழிலாளர் சமாஜ மகாநாடு திருமலை இந்துக்கல்லூரியில் அண்மையில் டாக்டர் சித்திரவேலு தலைமையில் நடைபெற்றது.

மட்டுநகர்ப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை, திருமலைப் பிரதிநிதி திரு. இராஜவரோதயம், திரு. இ. சோமசுந்தரம் ஆகியோர் பேசினர்.

---

மந்திரி இதற்குப் பதிலளிக்கையில், ஆஸ்பத்திரியின் நிலைமைகுறித்து தாம் உடனடியாக விசாரணை செய்வதாகக் கூறினர்.

---

## அழகைக் கெடுக்கும் சேரிகளை அகற்றுங்கள்

நுவரேலியா, திங்கள்

ஈழத்தின் எழில் பிரதேசங்களில் ஒன்ருக விளங்கும் ரம்படைபாதை பொது மராமத்துப் பகுதியினரால் விரைவில் கவனிக்கப்படாதுவிடில் சிறுசேரிகள் நிரம்பின இடமாக மாறிவிடும் என இலங்கை மோட்டார் சங்கச் சொந்தக்காரர் திரு. டி. ஜி. பி. ரணசிங்கா பொது மராமத்துப் பகுதியினருக்கு தெரிவித்துள்ளார்.

திரு. ரணசிங்கா மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கைக்குச் சுற்றுப்பிரயாணம்செய்யும் பிறநாட்டவர்கள் நுவரெலியாவுக்கு அதிகமாக ரம்படை பாதைமூலமே செல்கிருர்கள். அதிகமான பிரயாணிகள் கருதுவது போன்று இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசத்தின் எழிலும், அழகும் பொருந்திய காட்சிகள் உலகின் வேறு எந்தப்பகுதியிலுமே கிடையாது. இந்த அழகிய பிரதேசத்திற்குச் செல்லும் வழியை அழகற்றதாக விட்டு வைப்பது வெட்கத்துக்குரிய காரியமாகும். இலங்கை மோட்டார் சொந்தக்காரர் சங்கம் இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்வோருக்கு தன்னலியன்ற ஒத்துழைப்பை அளித்திருக்கின்றது.

ரம்படை பாதையின் 4வது மைல் தூரத்தில் இரு அழகற்ற சிறு குடிசைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வீதியின் பிரதான இடத்தில் உள்ள இக் குடிசைகள் தோட்டத் தொழிலாளர் தங்குமிடமாகப் பாவிக்கப்படுகின்றது. இக் குடிசைகளை ஒருநாளைக்கு இருப்பதற்கு அனுமதிப்பதே எனக்கு வியப்பைத் தருகின்றது. அப்புத்தளைப் பாதையும், ரம்படைப் பாதையும் இலங்கையில்மட்டுமல்லாது வெளி நாடுகளிலுமே பெயர்பெற்ற இடங்களாகும். பிரதம எஞ்சினியரிடமோ அல்லது கிராமச் சங்கத்திடமோ அனுமதி பெற்றுத்தான் இக்குடில்களைக் கட்டியிருக்கிருர்கள் என்பதை என்னல் நம்பமுடியவில்லை.

ரம்படைப் பாதையிலுள்ள நுவரேலியா முகப்பில் இன்னுமொரு குடிசை தோன்றியிருக்கிறது. இக்குடிசைகள் கட்டுவதை கட்டுப்படுத்தா விடில் இன்னும் அதிகமான குடிசைகள் நிறைந்துவிடுமென்றே நான் எண்ணுகிறேன்.

---

### யாழ்ப்பாண மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

கோவில் திருவிழாக்களுக்கும் கல்யாண வைபவங்களுக்கும், வேறு பல சுபகாரியங்களுக்கும் கரக, காவடி ஆட்டங்கள் மிகத் திறமையான முறையில் ஆடுபவர்கள்

**சோமசுந்தரம் கரக, காவடி கோஷ்டியார்கள்**

மாத்திரமே!

C. N. ஆறுமுகம் -கரகம்
R. S. சாமி -காவடி
M. T. தங்கராசா-அனுமார்

விபரங்கட்கு:-

தவில்: பொ. சோமசுந்தரம்
நி. 1377, ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்

லிங்கம் ஸ்ரோஸ்,
முனியப்பர் கோவிலடி,
கோண்டாவில்.

---

### அறிவித்தல்

அடைவு நகை ஏலவிற்பனவு தொல்புரம் இ. துரையப்பா அன்சன்ஸ்அவர்களின் அடைவு கடையில் 24-9-58 முதல் 31-12-60 வரையில் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை9.6.1962திகதிசனிக்கிழமை முற்பகல் 8 மணிக்கு முதல் மேற்படி கடையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
வெந்திஸ் மேஸ்தர்,
சித்தங்கேணி
7—5—1962

நாம்தா வீழ்ச்சி

# அமெரிக்கா-பிரிட்டன் ஆலோசனை

வாஷிங்டன், மே 8

வடமேற்கு லாவோசில் 'நாம்தா' என்ற நகரை இடதுசாரிப் படைகளான பதட்லாவோ படைகள் கைப்பற்றிக்கொண்டது சம்பந்தமாக அடுத்து என்ன நடிவடிக்கை எடுப்பது என்பது சம்பந்தமாகப் பிரிட்டனும் அமெரிக்காவும் ஆலோசனை செய்துவருகின்றன.

லாவோசில் மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கு லாவோசுக்கான 14 நாடுகளின் சர்வதேசக் கமிஷனின் கூட்டுத் தலைவர்களான சோவியத் யூனியனும் பிரிட்டனும் நாம்தாவிலிருந்து இடதுசாரிப் படைகளை யுத்தநிறுத்த எல்லைக் கோட்டுக்கு அப்பால் திரும்பிச் செல்ல முயற்சிசெய்ய வேண்டுமென்று யோசனை கூறப்பட்டுள்ளது,

இப்பொழுது சிங்கப்பூருக்குச் சென்றுள்ள லாவோசின் வலதுசாரி அரசாங்க உதவிப் பிரதமர் ஜெனரல் பூமிநொசவான் நிருபர்களிடம் பேசுகையில் நாம்தா வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டதுதானென்று கூறினர்.

நாம்தா வீழ்ச்சிக்குப் பின்னர் தாய்லாந்து எல்லையில் வலதுசாரிப் படைகள் முழு அளவில் திரட்டப்பட்டுள்ளது.

வலதுசாரி பிரதமர் இளவரசர் பூன்ஊமும் தென்வியட்னும் ஜனதிபதி நிகோடின்டயமும் சந்தித்துப் பேசியபின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் லாவோசுக்கு அமெரிக்கா அதிக உதவியளிக்கவேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசர்பூன்ஊமும் ஜெனரல் பூமிநொசவானும் நாளை லாவோஸ் திரும்பவிருக்கின்றனர்

# 'ஹிந்தி படிக்கும்படி கட்டாயப்படுத்தக்கூடாது'

—திரு. பக்தவத்சலம்

சென்னை, மே 7

'ஹிந்தியைப் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினல் எதிர்பார்ப்பதற்கு எதிரிடையான விளைவுகளை ஏற்படக்கூடும். கட்டாயப்படுத்தாமலேயே ஹிந்தி பரவிக்கொண்டிருக்கிறது. என்று சென்னை அரசாங்கத்தின் கல்வி மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர்.

சென்னை ஹிந்தி பிரசார சங்கத்தின் 16 ஆண்டுவிழாவை ஆரம்பித்துவைத்த மந்திரி திரு பக்தவத்சலம் மேலும் பேசுகையில், ஹிந்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை பலமாக தாம் கண்டிப்பதாகவும் தென்னுட்டின் பல அறிஞர்கள் வடநாட்டின் பல மொழிகளைக் கற்றறிந்ததாகவும் இதிலிருந்து நாட்டின் ஒருமைப்பாடும் ஐக்கியமும் நன்கு புலனவதென்றும் கூறினர்.

## பேராசிரியர் கஸ்ட்னர்

லண்டன், மே 7

லண்டன், கிங்ஸ் கல்லூரியில், இயந்திரப் பொறியியல் பேராசிரியர் எல். ஜே. கஸ்ட்னர், இன்று, இலங்கையில் மூன்று நாள் விஜயத்தில் வருகின்ருர். பேராசிரியர் கஸ்ட்னர், செவ்வாய்க்கிழமை மே8-ம் திகதி மாலை 5-30 மணியளவில் கொழும்பு காலிவீதி, பிரிட்டிஷ் கவுன்ஸிலில் "நவீன பொறியியல் முன்னேற்றங்களும், பொறியியலாளர் பயிற்சியும், கல்வியும்" என்னும் பொருள் பற்றிப் பேசுவார்.

# தி. மு. க. வை எதிர்க்க ஐக்கிய முன்னணி

## வீண் முயற்சி என்கிருர் அண்ணுத்துரை

மதுரை, மே 8

தென்நாடு பிரிவதற்கு சாதகமாயுள்ள சக்திகளை எதிர்ப்பதற்காக, நாட்டின் ஐக்கியத்தைக் காப்பாற்றுவதில் அக்கறைகொண்டுள்ள பலதரப்பட்ட கட்சிகள் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க எண்ணியுள்ளதுபற்றி தாம் அதிக அக்கறைப்படவில்லை என திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணுத்துரை திலகர் சதுக்கத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. அண்ணுத்துரை மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் இந்த யோசனை ஒருவித பலனும் அளிக்காது. ஏனெனில் இக் கட்சிகள் எல்லாம் நமது கொள்கைக்கு ஏற்கனவே எதிர்ப்புத் தந்துகொண்டிருக்கின்றன. எனவே இவ்விதம் அவர்கள் ஐக்கியப்படுவதால் புதிதாக எதுவும் நடந்துவிடப்போவதில்லை. அத்துடன் எமது கழகத்தை இந்தக் கட்சிகள் தனித்தனியே நின்று எதிர்க்கத் தைரியம் இல்லாதிருக்கின்றன. என்பதையும் எமது கழகம் கடந்த 10 வருடங்களில் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளது என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

திராவிடநாட்டுப் பிரிவினைக் கோரிக்கை இயற்கையாக எழுந்துள்ள சகதி. இதை துப்பாக்கி முனையால் அடக்கிவிடமுடியாது. அடக்கு முறையில் கட்சியின் தலைவர்களை ஒதுக்கித் தள்ளுவதால் திராவிடநாட்டுப் பிரிவினைக் கோரிக்கை மேலும் வலுவடையும்.

சகல மக்களுக்கும் பேச்சு சுதந்திரம் மறுக்கப்பட்டால்தான் திராவிடநாடு பிரிவினையைத் தடைசெய்யலாம் என்பதை கழகத்தின் கொள்கையை எதிர்ப்பவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலத்தைக் குறைப்பதற்கு அரசாங்கத்தின் பிரபல அரசியல் வாதிகள் முன்னர் எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியில் முடிந்தன. இப்போது தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டி எடுக்கும் புதுமுயற்சி பழைய புத்தகத்தின் மலிவுப் பதிப்பு என்றே கூறுவேன்."

திரு. அண்ணுத்துரை தமது கட்சி அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் கொண்ட கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்ததாவது.

ராஜ்ய சபாவில் திராவிடம் பற்றிய எனது கோரிக்கைக்கு பிரதமர் நேரு முற்றிலும் மறுத்துள்ளார் என நான் கருதவில்லை. பிரிவினையைத் தொடர்ந்து நிகழவிருக்கும் சம்பவங்கள் பற்றி வீணுக அச்சம் கொண்டதாலேயே ராஜ்யசபா அங்கத்தவர்கள் எனது கோரிக்கையை பலமாக ஆட்சேபித்தார்கள். அவர்கள் இதுபற்றி இவ்வாறு அச்சமுறத் தேவையில்லை என நான் அவர்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன். இப்பொழுது வடக்கும் தெற்குக்கும் இருந்துவரும் உறவு பிரிவினையின் பின்னரும் நீடிக்கும்.

மதுரை தி. மு. க. நிர்வாகச் செயலாளர் திரு. என். வி. நடராசன் கழகம் தனது திராவிட நாடு பெறும் குறிக்கோளை அடையும்வரை அங்கத்தவர்கள் யாவரும் திடம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த சக்தியை முறியடிக்க எத்தனிக்கும் எந்த முயற்சியையும் எதிர்த்தே தீருவோம் என்றும் அவர் கூறினர்.

# 'மால்டா கலகம்பற்றி ஐ. நா. வில் புகார்செய்யவேண்டும்'

## பாக். வழக்கறிஞர் கோரிக்கை

### மால்டா, மூர்ஷிதாபாத் சம்பவம்; மேற்குவங்க அரசாங்கம் விளக்கம்

கராச்சி, மே 8

மேற்கு வங்காளத்தில் மால்டாஜில்லாவிலும், மூர்ஷிதாபாத் ஜில்லாவிலும் சிறுபான்மையினர் கொல்லப்பட்டதாகவும், சிறுபான்மையினர் துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் இதுபற்றிபாகிஸ்தான் அரசாங்கம் ஐ. நா. சபையில் பிரச்சினை கிளப்பவேண்டுமென்றும் பாகிஸ்தான் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் கேட்டுள்ளது.

இந்தியாவில் முஸ்லிம்களின் நிலைமை பற்றி விசாரித்தறிவதற்கு சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கும்படி கோரவேண்டுமெனவும் வழக்கறிஞர் சங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது.

வகுப்புக் கலகங்களைத் தடுக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் அந்தச் சங்கம் இந்திய அரசாங்கத்தைக் கண்டித்தது.

**மேற்குவங்க அறிக்கை**

மேற்கு வங்காள அரசாங்கம் நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் இந்திய பாகிஸ்தான் பத்திரிகைகள் பொறுப்புடன் நடந்துகொள்ளுமென எதிர்பார்ப்பதாக நம்பிக்கை தெரிவித்தது.

மால்டாஜில்லாவில் சென்ற 18 தினங்களாக எவ்வித சம்பவமும் நடைபெறவில்லையென்றும் அங்கு பூரண அமைதி நிலவுகிறதாகவும அந்த அறிக்கை கூறியது. என்ருலும் அப்பகுதியில் எவ்வித சம்பவங்களும் ஏற்படாதவாறு பொலிஸ் காவல் அதிகரிக்கப்பட்டுள்ளதெனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. மால்டாவில் நடந்த சிறுசம்பவங்களை பாகிஸ்தான் பத்திரிகைகள் மிகைப்படுத்தியும் தவருன செய்திகளைப் பிரசுரித்தும் கிழக்குப் பாகிஸ்தானில் வகுப்புக் சலகத்தை தூண்டிவிட்டனவென்று அந்த அறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

மூர்ஷிதாபாத் ஜில்லாவில் வகுப்புக்கலகம் ஏறபட்டுள்ளதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிடுவதை அந்த அறிக்கை கண்டித்திருப்பதுடன் மூர்ஷிதாபாத்தில் கலகம் ஏதும் ஏற்படவில்லையென்றும் அங்கு அமைதி நிலவுகிறதென்றும் தெரிவிக்கிறது. மூர்ஷிதாபாத்தில் சமீபத்தில் தான் சட்டசபை ஸ்தானத்துக்கான உபதேர்தல் ஒன்று நடைபெற்றதென்றும் அத்தேர்தலில் ஒரு முஸ்லிம் அபேட்சகர் வெற்றிபெற்ருரென்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜாதிப்பற்றை ஒழிக்கவேண்டும்

### புதிய உபஜனதிபதி வேண்டுகோள்

பாட்னு, மே 8

அரசியல் வாழ்விலிருந்து ஜாதிப்பற்றை ஒழித்துவிட வேண்டுமென்று இந்தியாவின் புதிய உபராஷ்டிரபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் ஸக்கீர் ஹுசெயின் நேற்று பாட்னுவில் பீகார் முதன் மந்திரி அளித்த உபசார வைபவமொன்றில் பேசுகையில் கூறினர்.

## கிஸங்காமீது புரட்சிக் குற்றம்

லியப்போல்ட்வில்லி, மே 8

காங்கோ அரசாங்கத்துக்கெதிராக அந்நிய உதவிபெற்று புரட்சி செய்ய முயற்சி செய்ததாகவும் சிறைக்கைதிகளை கொடுமைப் படுத்தியதாகவும் காங்கோவின் முன்னுள் உதவிப் பிரதமர் திரு.கிஸங்காமீது குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவுள்ளது.

லியப்போல்ட்வில் லிக் கருகில் காவலில்வைக்கப்பட்டுள்ள திரு. கிஸங்கா மீது வழக்குத் தொடரப்படவேண்டுமென காங்கோ பார்லிமெண்டரிக் குழு முடிவு செய்துள்ளது.

# பிரான்சும் நிலத்துக்கு அடியில் குண்டுவெடித்து பரீட்சித்தது

லண்டன், மே 8

சகாராபாலைவனத்தில் அணு ஆயுத பரிசோதனைப் பகுதியில் பிரான்ஸ் அணுகுண்டு ஒன்றை நிலத்துக்கடியில் வெடித்து பரீட்சை செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இச்செய்தியை பிரஞ்சு அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்தனராயினும் அதுபற்றிய விபரம் எதையும் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

நிலத்தின் கீழ் பரீட்சிக்கப்பட்ட இக்குண்டு மிகவும் குறைந்த சக்திவாய்ந்ததென்று தெரிவிக்கப்படுகிறது.

பிரான்சின் அணுஆயுதபரீட்சைத் தொடரின் ஆருவதான இப்பரீட்சை நிலத்துக்கடியில் பரீட்சை செய்த இரண்டாவது குண்டாகும். இப்பரீட்சை மே மாதம் முதல்திகதி நடைபெற்றது.

## கந்தளாய்க்கு மரண விசாரணை அதிகாரி

திருகோணமலை, திங்கள்

கந்தளாய்ப் பகுதிக்கு ஓர் மரண விசாரணை அதிகாரி வேண்டும் என்று கந்தளாய் கிராமசபை அண்மையில் கூடி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. கூட்டத்திற்கு திரு. ஏ. பி. ஜேமிஸ் சில்வா தலைமை தாங்கினர்.

## உத்தியோகத்தர் தெரிவில் பலப் பரீட்சை

பருத்தித்துறை, செவ்வாய்

சுமார் ஏழு ஆண்டுகட்குப் பின் கற்கோவளம் ஐக்கிய பண்டகசாலையின் வருடாந்தக் கூட்டம் ஐந்து மாதங்களின் முன் நடைபெற்றது.

அந்தக்கூட்டமும் முறையற்றதென புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கூட்டுறவு உதவி ஆணையாளர் மீண்டும் ஓர் கூட்டத்தை இம்மாதம் 11-ந் திகதி கூட்ட உத்தரவிட்டுள்ளாராம்.

இக்கூட்டத்தையும் சில உறுப்பினர்கள் பகிஷ்கரிக்க திட்டமிட்டுள்ளாரெனக் கூறப்படுகிறது.

உத்தியோகத்தர் தெரிவில் பலப் பரீட்சைகள் ஏற்படலாமெனவும் இதன் விளைவாக சங்கம் கலைக்கப்படவும் நேரிடலாம் எனவும் கூறப்படுகிறது.

# "ஐ. நா. சாஸனம் திருத்தி அமைக்கப்படவேண்டும்"

—யுதாண்ட்

ஸ்டாக்ஹோம், மே 8

ஐ.நா. ஸ்தாபனத்தை வசப்படுத்துவதற்கு மூதற் படியாக ஐ. நா. சாஸனத்தை திருத்தியமைக்கவேண்டுமென்று ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இங்கு நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கருத்துத்தெரிவித்தார்.

ஐ. நா. பாதுகாப்புச்சபையும் திருத்தியமைக்கப் படவேண்டுமென்று கூறிய யு தாண்ட் பாதுகாப்புச் சபையில் அங்கத்தவர்களுக்குரிய ரத்து அதிகாரத்தை ரத்துச் செய்யவேண்டுமா என்பது பற்றித் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

உலகில் உயர் அதிகார மன்றமாக ஐ.நா. ஸ்தாபனம் விளங்கவேண்டுமென்றும் வெறும் வாக்குவாத சங்கமாகவோ மகாநாடு போன்ருே இருப்பதால் அது பயன் தராதென்றும் யு தாண்ட் தெரிவித்தார்.


8-வது ஆண்டு விழா

ஹான்ட்லூம்ஸ்

இந்திய அரசாங்கம்

5 % விலைக் கழிவு

1962 மே 2-ம் திகதியிலிருந்து
மே 12-ம் திகதி வரை

ஹான்ட்லூம்ஸ்

இந்திய அரசாங்கம்

7, செட்டியார் தெரு, கொழும்பு 11
47, மெயின் வீதி, யாழ்ப்பாணம்,- 69, கொழும்பு வீதி, கண்டி,
20, பஜார் வீதி, பதுளை.

## மணி வாக்கு

உண்மையை நாடுகிறவனுக்கு கர்வம் கூடாது. தன்னைத் தூசிக்குச் சமானமாகப் பாவிக்கவேண்டும். தூசியைக் காலில் துவைத்து உலகம் நடக்கிறது. உண்மையைக்காதலிப்பவன், அந்தத் தூசியின்கீழ்த் துவைபட்டு நிற்கும் தூசியாகத் தன்னைக் கருதவேண்டும். அப்போதுதான் மெய்ப்பொருள் நமக்குக் காட்சி தரும்.

—காந்திஅடிகள்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 26 உ (9-5-62)

## சபாஷ் நயினாதீவு!

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திலே, ஹரிஜன ஆலயப் பிரவேசம் அமைதியாக நடைபெற்றுள்ளது பாராட்டத்தக்கதாகும்.

ஆசாரத்துடன் வரும் எந்த இந்துக்களும் ஆலயத்துள் சென்று வழிபாடு செய்ய எவ்வித தடையுமில்லை என்று ஆலய தர்மகர்த்தாக்கள் சபையினர் சமீபத்தில் கூடி நல்ல முடிவு செய்தனர். இதைப்பின்பற்றி ஹரிஜனங்கள் ஸ்நானம் செய்து புனிதமாகவும் பக்தியுடனும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு பெருமகிழ்ச்சியடைந்ததாகத் தெரிகிறது. பொதுஜன அபிப்பிராயம் ஆலயப் பிரவேசத்துக்குச் சாதகமாக மாறி வந்துள்ளதென்பதற்கு, இந்த ஆலயப் பிரவேசம் நல்லதோர் அத்தாட்சியாகும்.

சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாண நகரிலுள்ள மூன்று முக்கிய ஆலயங்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டன. தீண்டாமை எனும் தீமை ஒழிந்தாலே, தமிழ் சமூகத்தில் ஒற்றுமை ஏற்படுவதுடன், தமிழர் உரிமையும் கிடைக்க முடியுமென்ற உணர்ச்சி வளர்ந்து, இந்தச் சீர்திருத்தமும் சாத்தியமாயிற்று. ஆனால் அதன்பிறகு வேறு ஆலயங்கள் திறந்துவிடப்படவில்லை. இந்த இயக்கம் தடைப்பட்டிருந்தது.

மகாத்மாகாந்தி, நாட்டு விடுதலை இயக்கத்துக்குத் தீண்டாமை ஒழிப்பைத் தமது நிர்மாண திட்டத்திலே ஒரு முக்கிய அம்சமாகச் சேர்த்தார். தீண்டாமை என்பது இந்து சமயத்துக்கு ஒரு சாபத்தீடு என்றும், இது நீங்காவிடில், இந்து சமயம் தலைதூக்க முடியாமல் நசித்துவிடுமென்றும் எச்சரித்தார். இந்தியாவுக்கு அவர் கூறியது இலங்கைக்கும் பொருந்தும்.

தீண்டாமை ஒழிப்பு, ஆலயப்பிரவேசம்பற்றி, சில இடங்களில் கருத்து வேற்றுமை இருக்கலாம். சிலர் தீவிரமாக எதிர்க்கவும் செய்யலாம் என்றாலும் பொதுமக்களில் பெரும்பாலோரும் இதன் தேவையை உணர்ந்து, ஆலயப் பிரவேச விஷயத்தில் மனம்மாறி வருகின்றார்கள். இச்சமயம் பல தலைவர்களும் சேர்ந்து பல ஆலய நிர்வாகிகளிடமும் பேசி, சுமுகமான முறையில் இச்சீர்திருத்தம் ஏற்பட முயற்சி செய்ய வேண்டும். அப்படி முயற்சித்தால் பெரும்பாலான இடங்களில் வெற்றி கிடைக்கும். எதிர்ப்பு இருக்குமிடங்களில், பொறுமையுடனிருந்து, அவர்களது மனதை நல்ல முறையில் மாற்ற முயற்சிக்க வேண்டும். தெய்வ அருளை நம்பி அன்புடன் இம்முயற்சியிலீடுபடின் எங்கும் வெற்றி கிடைப்பது உறுதி. நீண்டகாலமாக ஊறிப்போன வியாதி. அது சுலபமாக நீங்குவது முடியாதுதான். என்றாலும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் இச்சீர்திருத்தம்அதிக கஷ்டமின்றி நிறைவேற முடியும். தமிழ் மக்கள் தங்களில் ஒரு சாரினருக்கு சமஉரிமையும் நீதியும் வழங்கினால்தான் தமிழ் சமூகத்துக்கும் மற்றவர்களிடமிருந்து அதே உரிமையும் நீதியும் கிடைக்க முடியும் இவ்விஷயத்தில் தலைவர்கள் இனியும் அசமந்தமாக இரார் என்பதற்கு நயினாதீவு ஆலயப் பிரவேசம் புதிய நம்பிக்கை அளிக்கின்றது.

# நிலக்கரி, நீர், எண்ணை மூலம் மின் சக்தி

## பல்லாயிரம் வருடங்களுக்கு போதுமானதாய் இருக்கும்

— எக்கார்ட் நூல்வின் —

நிலக்கரி, எண்ணெய், நீர் இவைகளைக் கொண்டு மின் சக்தியை உபயோகிப்பது நீண்டகாலம் நீடிக்காது என்றும், அநேக வருடங்களுக்குப்பிறகு அணுசக்தியைக் கொண்டே மின்சக்தியை உற்பத்தி செய்யவேண்டியிருக்கும் என்றும் கருத்து இருந்து வருகிறது. இது தவறு. எதிர்காலத்தில் நிலக்கரி, நீர், எண்ணெய் இவை மூலமே ஏராளமான மின் சக்தியை உபயோகித்துக் கொள்ள முடியும். உலகில் கிடைக்கக்கூடிய நிலக்கரியும் எண்ணெயுமே இன்னும் அநேக ஆயிரவருட காலங்களுக்கு சக்தியை சப்ளை செய்யப போதுமானதாக இருக்கும். இந்த சக்தி சப்ளை விஷயமாக நெருக்கடி ஏற்படவே ஏற்படாது என்பது சக்தி விஷயமாக ஆராய்ச்சி செய்துவரும் நிபுணர்களின் கருத்தாகும். ஏராளமாக உள்ள நிலக்கரியையும் எண்ணெயையும் விற்க முடியாதபடியான நிலைமை ஏற்படும் என்றும் இவர்கள் அஞ்சுகின்றனர். மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பொருளாதாரப் பேராசிரியர் பாடே இக் கருத்தையே வெளியிட்டு எதிர்காலத்தில் அணுசக்தியைத் தான் நம்பியிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்கிறார்.

இவர் உலகப் பொருளாதாரக் கழகத்தின் தலைவராக பல வருடகாலம் பணியாற்றியவர். அபிவிருத்தி உதவி விஷயமாக மேற்கு ஜெர்மன் அரசாங்கத்திற்கு ஆலோசகராகவும் சேவை செய்திருக்கிறார். மேற்கு ஜெர்மன் பாராளுமன்றத்தின் அங்கத்தினராகவும் இவர் இருந்து வருகிறார். உலகின் உணவுப் பிரச்சினை, சக்திப் பிரச்சினை இவைகள் குறித்து ஆராய்ந்து பல புத்தகங்களை இவர் எழுதியிருக்கிறார்.

கி. பி. 2000 ஆண்டு நடைபெறும் போது உலகில் மின் சக்தி உபயோகம் இப்போதுள்ள அளவைவிட நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமாக இருக்கும் என்று இவர் கூறுகிறார். நிலக்கரி, நீர், எண்ணெய், வாயு இவைகளைக் கொண்டே இந்த சக்தியை உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்கிறார் இவர். இதற்கான புள்ளி விவரங்களையும் வெளியிட்டு தான் செய்துள்ள முடிவு சரியானது என்பதையும் இவர் விளக்குகிறார்.

கி. பி. 2000 ஆண்டில் உலக ஜனத்தொகை 500 கோடியாக அதிகரிக்கும் என்று புள்ளி விவர நிபுணர்கள் கூறுகின்றனர். அப்போது உற்பத்தி செய்துள்ள பொருள்கள், சேவைகள், இவை 1950ல் இருந்ததைவிட 6மடங்கு அதிகரிக்குமாம். சக்தியின் அளவு அப்போது 5மடங்கு அதிகமாக மட்டுமே தேவைப்படும். இப்போது எண்ணெய் உற்பத்தி, நிலக்கரி வெட்டிஎடுப்பது அதிகருத்துவருகிறது. இவை இன்னும் ஏராளமாகக் கிடைக்கும் நிலைமை இருந்து வருகிறது. இவை உற்பத்தி அதிகரிப்புச் சராசரி 10 சதவிகிதமாக இருந்துவருகிறது. எண்ணெய் உற்பத்தி இதே விகிதத்தில் நீடித்துவந்தாலும் 2000 ஆண்டில் தேவைப்படும் சக்தியைவிட 6மடங்கு அதிகமான சக்தியை உற்பத்திசெய்ய போதுமானதாக இருக்கும். பூமிக்கடியில் உள்ள எண்ணை ஸ்டாக் எவ்வளவு எடுத்தாலும் குறையாத அளவில் இருப்பதாகக் கூறப்படுகிறது. 1350கோடி ஹெக்டேர் விஸ்தீரணத்தில் பூமிக்கடியில் கிடைக்கும் எண்ணெயின் அளவே இது. சமுத்திரத்திற்கு அடியிலிருந்து கிடைக்கக்கூடிய எண்ணெய் குறித்து இதில் சேர்க்கப்படவே இல்லை.

திரு. பாடேயின் கணக்குப்படி 2000 ஆண்டில் சக்தி தேவைக்கு நிலக்கரி உற்பத்தி 1.5 சத விகிதம் அதிகரித்தால் போதும்இந்தியா, சீனாபோன்ற நாடுகளில் நிலக்கரி உற்பத்தி இன்னும்போதுமான அளவுக்கு கண்டுபிடித்துப் பயன்படுத்தப்படவில்லை. இவைகள் பயன்படுத்தப்படும்போது நிலக்கரி இன்னும் ஏராளமாகக் கிடைக்கும். நீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேற்றப்படும் காரணத்தினால் நீர்சக்திமூலம் மின்சார உற்பத்தி ஏராளமாக அதிகரித்துவரும்.

இன்று ஐரோப்பாவிலும், வட அமெரிககாவிலும் மட்டும்தான் நீர் சக்தி மூலம் மின்சார உற்பத்தி 20 சதவிகிதத்திற்குமேல்பயன்பட்டுவருகிறது தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய நாடுகளில் இந்தத் துறையில் மின்சக்தி உற்பத்தி 5 சத விகிதத்திற்கும் குறைவானதாகும்.

2000 ஆண்டில் மின்சக்தி உற்பத்தி ஏராளமான அளவுக்கு பெருகியிருக்கும். இதுவரை கூறிய விவரங்களில் அணுசக்தி மூலம் தயாரிக்கக்கூடிய சக்தி பற்றி பிரஸ்தாபிக்கப்படவே இல்லை. அப்போது மின் சக்திக்கு அணுசக்தியை நம்ப வேண்டிய அவசியமே இராது.

ஆனால் எதிர்கால சந்ததியினருக்கு நிலக்கரி எண்ணெய், சக்தி உற்பத்தி தவிர வேறு காரியங்களுக்குப் போதிய அளவுக்குக் கிடைக்க வேண்டும் என்றால் அணுசக்தியை பயன்படுத்தி அதன் மூலமும் சக்தியை உற்பத்தி செய்ய முனைவது வரவேற்கத்தக்கதே. அணுசக்திமூலம் உற்பத்தி மிக மலிவாக இருந்தால் அதைப் பயன்படுத்துவது மிகவும் சிலாக்கியமானதேயாகும். ஆனால் குறைந்த செலவில் அணுசக்திமூலம் மின்சார சக்தி உபயோகிக்க முடியவில்லை என்றால் ஆராய்ச்சிகளுக்காக மட்டுமே அதைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்று திரு. பாடே கூறுகிறார்.

## புளியங்குளம் ஆசிரியர் சங்க ஆரம்பவிழா

புளியங்குளம், செவ்வாய் "இதே போன்று உத்தியோகஸ்தர்கள், தாம் எந்த இடத்தில் கடமையாற்றுகிறார்களோ அந்த இடத்தைத் தமது சொந்த இடமெனக் கருதிக் கடமையாற்றி நாட்டை முன்னேற்றவேண்டும்"

இவ்வாறு புளியங்குளம் அரசினர் பாடசாலையில் நடைபெற்ற புளியங்குளம் வட்டார ஆசிரியர் சங்க ஆரம்ப விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது புளியங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. நவரத்தினம் குறிப்பிட்டார்.

உத்தியோகஸ்தர் தெரிவு பின்வருமாறு:-

தலைவர்:- புளியங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. நவரத்தினம். உபதலைவர்:- ஓமந்தை அரசினர் மகாவித்தியாலய அதிபர் திரு. செ. கந்தையா. காரியதரிசி:- கனகராயன் குளம் அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வ. கணேசன். தனாதிகாரி:-புளியங்குளம் அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ க. வைத்தீசவரக்குருக்கள்.

## பாகிஸ்தான் புதிய நிதி மந்திரி

காரச்சி, மே 8

தற்போதுய மேற்குப் பாகிஸ்தான் கவர்னர் பாகிஸ்தானின் புதிய நிதிமந்திரியாக நியமிக்கப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தான் கவர்னர் லெப்டினன்ட் ஜெனரல் ஹாசிம் கான் தமது ராஜினமாவைச் சமர்பித்துவிட்டார்.

ஜனப்குலாம் ஷெயிக் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## வீடமைப்பு இலாகாவுக்கு ரூ. 1 கோடி

கொழும்பு, செவ்வாய்

வீடமைப்பு இலாகாவுக்கு ஒருகோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமெனக் கோரி வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீர விரைவில் ஒரு உபமான்ய மசோதாவை பார்லிமெண்டில் கொண்டுவரவிருக்கிறார்.

நாலரைச் சத விகித வட்டியுடன் 14 வருடங்களில் இத்தொகை திருப்பிச் செலுத்தப் படுவதற்கு நிதிமந்திரி அநுமதியளித்துள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

சில கலை அன்பர்கள் நேற்று வந்தனர். நாளை வியாழனன்று யாழ்ப்பாண நகர மண்டபத்தில் சிற்ப, ஓவியக் கலைக் காட்சியை நடத்துவதாயும், முன் கூட்டி அதை வந்து பார்த்து, சில நல்ல வார்த்தைகள் எழுத வேண்டுமென்றும் அன்புடன் கேட்டனர்.

கலைஞர்கள் வேண்டுவது காசு பணம்கூட அல்ல. தங்கள் கலைச் சிருஷ்டிகளை பிறர் பார்த்து இன்புற்று, பாராட்டினால், அதுவே அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்தது மாதிரி. பிறரை இன்புறச் செய்வதன்மூலம் அவர்கள் இன்பமடைகின்றனர்.

அழைப்பை ஏற்று அங்கு சென்று பார்த்தேன். பலபல வர்ண ஓவியங்களையும், சிற்பப் பொருள்களையும் வைத்திருந்தனர். பொய்க் கால் குதிரை நடனம், பல இயற்கைக் காட்சிகள், இப்படங்கள் என் மனதைக் கவர்ந்தன. ஓவியக் கலைத் திறமை இங்கு பலரிடம் இருப்பதையும் போதிய உற்சாகமும் ஆதரவுமளித்தால் இக்கலை வளர அதிக இடமுண்டென்பதையும் கண்டேன்.

சித்திரக் கலைஞர்களுக்கு மேற்கு நாடுகளில் அதிக மதிப்புண்டு. சில ஓவியங்களுக்கு அங்கு லட்சக்கணக்கான பவுண் விலை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்!

போட்டோவுக்கும் ஓவியத்துக்கும் அதிக வேற்றுமை உண்டு. மில் புடவை போன்று, போட்டோக்கள் மெஷினின் தயாரிப்பு. ஆனால் ஓவியங்களோ, அழகான காஞ்சிபுரம் கைத்தறிப் பட்டுப் புடவை போன்றது. கைவண்ணமும் மனோ தர்மமும் கலந்து, கலைப் பொருளுக்கு உயிரூட்டுவன.

சுமார் மூன்றாண்டுகளாக யாப்பாணத்தில் நடைபெறும் 'ஓய்வு கால ஓவியர் கழகத்'தைக் கலையரசு சொர்ணலிங்கத்தார் உள்ளிட்டு பல கலா ரசிகர்களும் கலை விற்பன்னர்களும் நடத்தி, கலை மாணவர்களுக்கு ஊக்கமளிக்கின்றனராம். காட்சி இலவசம்தான். பிரமாதமாக இருக்குமென்று நான் கூறவில்லை. ஆனால் இந்த இளம் கலைஞர்களின் சிருஷ்டியைக் கண்டு, அவர்களுக்கு உற்சாகமூட்டுவது, இங்கு கலைகள் மென்மேலும் வளர உதவுவதாக இருக்கும்.

* * *

இக்கலைக்கழகத்துக்குச் செல்லும்போது, எதிரே ஒரு வீட்டில் ஒரு மாணவரின் கலைக் காட்சியைக் காணவேண்டுமென்று மற்றோர் அன்பழைப்புக் கிடைத்தது.

கோழி இறகுகள், உடைந்த முட்டைகள், கிளிஞ்சல்கள், ஓட்டைச் சங்குகள், கடல் பூச்சிக் கூடுகள், இவற்றைக் கண்டால் நாம் என்ன செய்வோம்! குப்பை என்று அகற்றுவோம். ஆனால் சென்டிரல் கல்லூரி மாணவரான செல்வன் யோகநாதன், இக்குப்பைப் பொருள்களைக்கொண்டு அழகு அழகான பல கலைப் பொருட்களை அற்புதமாகச் சிருஷ்டித்துள்ளார். அவர் ஒரு பிறவிக் கலைஞர். பல பிரமுகர்கள் அவரது கலைத்தன்மையைப் பாராட்டியுள்ளனர். பல அறைகளை அவரது கலைப் பொருள்கள் அழகு செய்கின்றன.

இவ்வித கலைகளுக்கு அரசாங்கத்தின் அமோகமான ஆதரவும் உதவியும் கிடைக்க வேண்டும். தமிழ் வாலிபர் தானே என்று அரசாங்கம் அலட்சியப்படுத்தி ஒதுக்கி விடாதென்றே நம்புகிறேன்.

* * *

"நேருவுக்கும் எனக்கும் கருத்து வேற்றுமைகள் என்ன இருப்பினும் சரி, நாங்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் உள்ளூர நேசிக்கிறோம். அந்தப் பதவியை அவரைவிடத்திறமை

(5ம் பக்கம் பார்க்க)

# இலங்கை சர்வகலாசாலை

## பிரவேசப் பரீட்சை

### யாழ்ப்பாணத்திலிருந்து மொத்தம் 234 பேர் சித்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற இலங்கைச் சர்வகலாசாலை பிரவேசப் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து சித்தியெய்தியவர்களின் விபரம் இங்கு தரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டதிதிலிருந்து விஞ்ஞானப் பகுதியில் 121 பேரும் கலைப்பகுதியிலிருந்து 113 பேரும் சித்தியெய்தியிருக்கின்றன.

**I விஞ்ஞானப்பகுதி**

**வைத்தியப் பகுதி**

சுண்டிக்குளி பெண்கள் பாடசாலை:- செல்வி ஜே. வேலுப்பிள்ளை.

ஹார்ட்லிக் கல்லூரி பருத்தித்துறை:- ஏ.சோமாஸ்கந்தர். செல்வி கே. தம்பையா, செல்வி எம். தருமகுலசிங்கம், கே. திருநாதன்.

யாழ்மத்திய கல்லூரி:- எம். கோவர்த்தனராசா, கே. சிவலிங்கம், செல்வி டி. திருநாவுக்கரசு, என். சண்முகதாசா.

யாழ்இந்துக்கல்லூரி:- எஸ். ராமமூர்த்தி, கே. சந்திரசேகரம்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி:- செல்வி டி. காசிவிசுவநாதன், செல்வி ஜே. சண்முகம், செல்வி எஸ். செல்லத்துரை.

யாழ் பரமேஸ்வரக்கல்லூரி:- ஆர். ஐ. சுவாமிநாதன்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி:- எஸ். பழனியப்பன், வி. சிவபாதசுந்தரம்.

யாழ் சென். ஜோன்ஸ்கல்லூரி:- செல்வி டி. கந்தையா, சி. எஸ். நச்சினார்க்கினியன், எஸ். நரேந்திரன், ஜி. ஜே. நவரத்தின சிங்கம்,கே. இராஜகுலசிங்கம், ஜே. சி. பி. சாமுவேல்.

**பல் வைத்தியப் பகுதி**

**(பி. டி. எஸ். தரம்)**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி:- செல்வி எஸ். சின்னத்துரை, ஆர். யோகசாகரர்.

**மிருகவைத்தியப் பகுதி**

வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி:- செல்வி எஸ். இராசையா.

**தாவர மிருகசாஸ்திரப் பகுதி**

பருத்திததுறை ஹார்ட்லிக் கல்லூரி:- என். பாலகிருஷ்ணன்.

யாழ். திருக்குடும்ப கன்னியாஸ்திரீகள் பாடசாலை:- செல்வி டி. பீட்டர்.

யாழ். மத்திய கல்லூரி:- செல்வி ஜி. தம்பிப்பிள்ளை.

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி:- எம். புஷ்பராசா.

யாழ். இந்துக்கல்லூரி:- கே. நிர்மலன்.

கொக்குவில் இந்துக் கல்லூரி:- செல்வி எஸ். சுதாமதி.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி:- செல்வி எஸ். கந்தையா, செல்வி பி. காசிவிசுவநாதர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி:- செல்வி எம. அரியரத்தினம்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலம்:- செல்வி வி. வசந்தாதேவி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி:- செல்வி ஏ. ஆனந்தசுந்தரம், செல்வி பி. செல்லையா, எம். செல்லப்பா, எம். கந்தையா, செல்வி பி. கந்தையா, செல்வி பி. முத்துத்தம்பி, கே. நற்குண சிங்கம், எம். பொன்னம்பலம், செல்வி சி. ஆர். இராஜநாயகம், கே. செல்வரத்தினம், செல்வி எம். சுப்பிரமணியம்.

**விவசாயத்துறை**

சுண்டிக்குழி பெண்கள் கல்லூரி:- செல்வி ஆர். அரசரத்தினம்.

**பொறியியல் துறை**

பருத்தித்துறை ஹார்லிக் கல்லூரி:- டி. சுங்காதரம், டி. ஏ. ஜெயசீலன், பி. ஜெயசிங்கம், ஆர். விவேகானந்தன், சி. யுவராஜ்.

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி:- டி. ஏ. ஏர்னஸ்ட், எஸ். மனோகரன், வி. வி. சின்னத்துரை, என். தியாகராசா, எஸ். திருஞானசம்பந்தர்.

யாழ். இந்துக்கல்லூரி:- டி. கே. இராமேஸ்வரா, எஸ். சின்னராசா, பி. சிவஞானசுந்தரம், எஸ். திருவருட்செல்வம்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி:- ஏ. சத்தியசீலன், எஸ். விக்னராசா.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்:- என். இராமசாமி.

சுன்னாகம் ஸகந்தவரோதயக் கல்லூரி:- எஸ. செல்வராசா.

புத்தூர் ஸ்ரீ சோமஸகந்தக் கல்லூரி.- வி. தேவேந்திரன்.

யாழ். சென் ஜோன்ஸ்க்கல்லூரி:- ஜி. பாலச்சந்திரன், எம். நல்லையா, கே. நந்தகோபன்.

யாழ். சென் பற்றிக்ஸ கல்லூரி:- எஸ. அகஸடின்பிள்ளை, பி. பஞ்சாமிர்தம், என். எஸ. பி. ஜே. சத்தியநாதன்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி:- ஏ. வாமதேவன்.

**உடல் கூற்றுத்துறை**

வல்வை சிதம்பரக் கல்லூரி:- எஸ். கமலரங்கன்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி:- கே. கந்தசாமி, ஏ. சிவசுப்பிரமணியம்.

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி:-எஸ். குகநேசன், கே. கணேசலிங்கம், என். சண்முகநாதன், கே. சிவராசா.

யாழ். இந்துக் கல்லூரி:- சரவணமுத்து பாலசுப்பிரமணியம், சிவகுருநாதன் பாலசுப்பிரமணியம், சி. சண்முகதாஸ், டி. கனகரத்தினம். கே. நடேசலிங்கம், எஸ். நவரத்தினராசா, பி. இராமநாதன், எஸ். சிவகுமாரன், எஸ். தங்கராசா, எஸ். தில்லையம்பலம், சி. யோகேந்திரன்.

கொக்குவில் இந்துக் கல்லூரி:-எஸ்.மகேஸ்வரன், டி.தனபாலசிங்கம்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி:- ஏ. தேவதாசன், என். ஆர். திருநாவுக்கரசு, ஏ.வேல்முருகன்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்:- எஸ். திருநாவுக்கரசு

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்:- பி. ஐ. ஆர். ஐ. பத்மநாபர் ஐயர், செல்வி ஐ. பி. கமலாதேவி.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி:- செல்வி எஸ். டி. ஆறுமுகம், எஸ். ஆலாலசுந்தரம், எஸ். அமரக்கோன், வி. ஐயாத்துரை, டி. எச். ஜெயராசா, டி. கயிலைநாதன், வி. குகநேந்திரன், டி. குணரத்தினம், ஏ. சிவராசா, வி. துரைரத்தினம், பி. வேலாயுதம், எஸ். ஐ. விஸ்வேஸ்வர ஐயர்.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி:-சி. இமானுவல்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி:- ஏ. ஜே. ஆனந்தராசா, பி. சுந்தரலிங்கம்.

யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி:- ஏ. எல். காரியர், ஆர். ஜி. போல்பிள்ளை.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி:-கே. ஸ்ரீஸ்கந்தராசா.

வேம்படி பெண்கள் உயர்தர பாடசா:-செல்வி வி. கணபதிப்பிள்ளை.

யாழ்.வெளி மாணவர்:-எஸ். அகஸ்தீன்பிள்ளை, பி. பஞ்சாமிர்தம், என். எஸ். பி. ஜே. சத்தியநாதன்.

**II கலைப்பகுதி 113**

அளவெட்டி அருணேதயாக் கல்லூரி:- ஏ. சிவராசா, எம். சிவப்பிரகாசம்.

வல்வெட்டி சிதம்பராக் கல்லூரி:- என். பரமசோதி.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி:- செல்விகள் பி. மாணிக்கவாசகர், எல். பரமகுரு, ஐ சதாசிவம், ஜே. எஸ். வல்லிபுரம்.

பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி:- கே. சச்சிதானந்தம், ஆர். சிவபாதசுந்தரம், எஸ். சிற்றம்பலம், செல்வி ஐ. தம்பித்துரை, என். வேல்முருகு.

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்:- செல்வி எம். ஜே. ஆர். வஸ்தியாம்பிள்ளை.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி:- செல்வி என். ரி. அருமைநாயகம், செல்வி எஸ். கந்தையா, ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம். லீலாநாதன், செல்வி பி. எம். இராமலிங்கம், என். தற்பரானந்தன்.

யாழ். இந்துக் கல்லூரி:- கு. பரமேஸ்வரன், எஸ். பத்மநாதன்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி: செல்விகள், கே. இளையதம்பி, பி. கந்தையா, எம். சண்முகம், கே. செல்லத்துரை பி. சின்னத்தம்பி, வி. சிவபாதசுந்தரம், ஏ. சுப்பிரமணியம். ஆர். சுப்பையா, என். துரைசுவாமி.

காரைநகர் இந்துக்கல்லூரி: செல்வி ரி. கௌரி.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி: எஸ். கனகசிங்கம், செல்வி ரி. கந்தையா, என். மயில்வாகனம், கே. சண்முகலிங்கம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி.- கே. வரதராசா.

பருத்தித்துறை மெதடிஸ் மகளிர் உயர்தர கல்லூரி:- செல்வி ஏ. பி. வேலாயுதம்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்:- கே. பி. முருகேசு, செல்வி எஸ். தனபாக்கியம்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி:- செல்விகள் எஸ். கமலா, ஆர். கமலாதேவி, எஸ், கண்மலர், ரி. காந்த மலர், எம். லலிதாம்பிகை, ரி. மகாலக்குமி, வி. நாகலட்சுமி, பி. பரசாதி, ஆர். பத்மாவதி, சோமசுந்தரம் பத்மாவதி, சொக்கலிங்கம் பத்மாவதி, ஆர். புஸ்பம், எஸ். இரத்தினேஸ்வரி, கே. சரஸ்வதி, வீ. சரஸ்வதி, ஆர். சரோஜினிதேவி, எஸ். சத்தியலட்சுமி, சி. சாவித்திரி, சி. செல்வநாயகி, பி. சிவகாமிப்பிள்ளை, எஸ். சிவஞானேஸ்வரி, எஸ். சவுந்தரநாயகி, என். தனவதி, என். தர்மேஸ்வரி, வீ. திலகவதி, பி. உமாராணி, வி. யோகலட்சுமி.

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி:- செல்வி என். கமலாதேவி, செல்வி ஈ. கோமளதேவி, கே. பரராஜசிங்கம்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி:- கே. சந்திரசேகரம், ஈ. கனேந்திரன், வி. நடராசா, எஸ். சண்முகலிங்கம், செல்வி ஆர். தாமோதரம்பிள்ளை, என். தணிகாசலம்பிள்ளை, கே. தர்மலிங்கம், எஸ். வெற்றிவேலு.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி:- ரி. கந்தசாமி, கே. செல்லத்துரை, எஸ். வைகுந்தநாதன், எஸ். விஸ்வலிங்கம்

யாழ். ஸ்ரான்லி மத்திய மகா வித்தியாலயம்:- எஸ். குணசிங்கம், செல்வி எஸ். பொன்னம்பலம், ரி. தெட்சணமூர்த்தி.

யாழ். சென். யோன்ஸ் கல்லூரி:- ஆர். கே. டானியல், எம். கனகரத்தினம், கே மாணிக்கவாசகர், எஸ். துரைராசா, எஸ். யோகநாதன்.

யாழ். சென். பற்றிக்ஸ கல்லூரி:- எம். ஏ. அலோசியஸ, ஏ. ஏ. ஜெயநாதன், ஏ. செபஸதியாம்பிள்ளை, ஏ. தார்சியஸ, டி. எப். சேவியர்.

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை:- ஆறுமுகசாமி. எம்.

உடுப்பிட்டி மகளிர் ஆங்கில பாடசாலை:- செல்வி எஸ. வேலுப்பிள்ளை.

உடுவில் மகளிர் கல்லூரி:- செல்வி. பி. அப்புத்துரை.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி:- ஈ. சுப்பிரமணியம்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி:- கே. சின்னராசா.

யாழ். வைத்தீஸவர வித்தியாலயம்:- எஸ. அமரேசன். கே. முருகேசு, சி. இராமசாமி, எஸ. தெட்சணமூர்த்தி.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை:- செல்விகள் எம். ஆர். குணரத்தினம், ஜே. கந்தையா, எல். டி மகாலிங்கம், ஏ. முகதுக்குமாரு, எஸ். சுந்தரம், மீக. தம்பிராசா.

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி:- எஸ். ஏ. சிற்சபேசன்.

யாழ்ப்பாணம் (தனிப்பட்ட பரீட்சார்த்திகள்):- செல்வி வை கந்தையா, செல்வி ரி. நாகலிங்கம்.

# பாடசாலை தேசிய சேவையில் பாலம் அமைத்தனர்

### நெடுந்தீவு மாணவர்கள் சாதனை

நெடுந்தீவு, செவ்வாய்

நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் தமது இரண்டாம் தவணையின் முதலாவது தேசிய சேவையை சனிக்கிழமை தொடங்கினர்கள். நூறு மாணவர்கள் வரை கல்லூரிக் கொடியுடன் சென்று நெடுந்தீவுத் துறைமுகத்தில் ஓர் தற்காலிக பாலம் அமைக்கும் வேலையை ஆரம்பித்தார்கள். நெடுந்தீவின் பிரயாண மோட்டார் படகாகிய "இராசேஸ்வரி" துறைமுகத்திற்குள் போக முடியாது நிற்பதினல் பிரயாணிகள் இறங்குவதற்கும் ஏறுவதற்கும் முடியாதிருந்தனர். துறைமுகத்தின் ஆற்றுக் கட்டை ஒன்றின் பக்கத்தில் மக்களைக் கட்டுமரம் மூலம் இறக்கும் பொருட்டு 50 யார் நீளமுள்ள பாலமொன்றை ஆசிரியர்களும் மாணவர்களும் தேசிய சேவையில் மூன்று மணித்தியாலத்திற்குள் செய்து முடித்தனர்.

---

## கல்லைக்கட்டி கிணற்றுள் தற்கொலை

மாவிட்டபுரம், செவ்வாய்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த முருகர் கந்தையா (வயது 75) தமது வீட்டு வளவில் உள்ள கிணற்றில் காலில் சுமார் ஆறு ருத்தல் நிறையுடைய கல்லைக் கட்டியிறங்கித் தற்கொலை செய்து கொண்டார். மல்லாகம் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. இளயதம்பி மரண விசாரணை நடத்தினர்.

சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸடபிள் பி. ஏ. என். பெரேரா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

காலஞ் சென்றவரின் மகளான திருமதி கனகம்மா நாகமணி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவ தினத்துக்கு முதலிரவு காலம் சென்றவருக்கு தேநீர் எடுத்துச் சென்றேன். அவர் தன்னல் ஒன்றும் சாப்பிட முடியாதெனக் கூறி தேநீர் அருந்த மறுத்து விட்டார். நாங்கள் படுக்கைக்குச் சென்று விட்டோம். அடுத்த நாஅகாலைஎனது தந்தைகிணற்றினுள் பிரேதமாகிக் கிடந்தார். எனது தந்தை வயது முதிர்ச்சி காரணமாக நோயால் பீடிக்கப்பட்டிருந்தார்.

சென்ற வாரம் தொடக்கம் நோய் கடுமையானது. இதனல் அவர் ஒன்றும் சாப்பிட முடியாத நிலைக்கு உள்ளானர். இந்த நோய் காரணமாக எனது தந்தை தற்கொலை செய்து கொண்டிருக்கலாம். எனது தந்தைக்கு எதிரிகள் கிடையாது."

வல்லிபுரம் நாகமணி, இளையதம்பி குணரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்த பின் மரண விசாரணை அதிகாரி நோய் காரணமாகத்தற்கொலைசெய்து கொண்டார் எனத் தீர்ப்பளித்தார்.

---

## மோட்டார் கார் என்பது நிரூபிக்கப்பட வில்லை

### எதிரி விடுதலை

மாவிட்டபுரம், செவ்வாய்

"பிரயாணிகள், மோட்டார் வான்களில் பிரயாணம் செய்யும்போது தங்களின் உடலின் பாதிப் பகுதியை வெளியில் தொங்க விடுகிறார்கள். சிலசமயங்களில் வான்களின் கூடாரத்தில் இருந்தும் பிரயாணம் செய்வதையும் நான் பார்த்திருக்கிறேன். இப்படிப் பட்ட சட்டவிரோதமான செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். உமது வானில் எத்தனை பிரயாணிகளை வசதியாக ஏற்ற முடியுமோ அக்குறிப்பிட்ட நபர்களை மாத்திரம் தான் வானில் ஏற்ற வேண்டும். அதற்குமேல் ஏற்றக்கூடாது."

காரைநகரைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை வேலாயுத பிள்ளை என்பவர் மோட்டார் காரில் அதிகப்படியான பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாக சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில்தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியை விடுதலை செய்கையில் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். செல்வரத்தினம் கூறியதாவது:-

"பொலிசார் அந்த வாகனம் கார்தான் என்பதை நிரூபிக்க வில்லை. பொலிசார்சார்பில் ஆஜரான சாட்சிகள் குறுக்கு விசாரணைசெய்யப்பட்டபோது இந்த வாகனம் மோட்டார் கார் அல்ல 'வான்' தான் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். போக்கு வரத்துச் சட்டங்களின்படி மோட்டார் காரில் எட்டுப் பிரயாணிகளுக்குமேல் ஏற்ற முடியாது. ஆனல் இந்த மோட்டார் வாகனத்தில் பத்துப் பேர் பிரயாணம் செய்ய வசதி இருப்பதால் இதுபோக்குவரத்துச் சட்டப்படி ஓர் மோட்டார் 'வான்' ஆகும்."

நீதிபதி எதிரியை விடுதலை செய்து தனது தீர்ப்பைக் கூறுகையில் பொலிசார் வழக்கை நிரூபிக்கத் தவறிவிட்டார்களென்றும், அவர்கள் தமது சார்பில் அழைத்த சாட்சிகள் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்குப் பதிலாக எதிரி விடுதலை செய்யப்படுவதற்குக் காரணமாகிவிட்டது என்றும் தெரிவித்தார்.

---

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் "இசைக்களஞ்சியம் வெளியீட்டு விழா" இம்மாதம் 13-ம் திகதி மாலை யாழ்ப்பாண மாவட்ட உதவி நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில்நடைபெறவிருக்கிறது.

---

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

யாக வேறு யாரும் வகிக்கமுடியாது."

—ராஜாஜி.

வாயானை மனத்தானை
மனத்துள் நின்ற
கருத்தானை கருத்தறிந்து
முடிப்பான் தன்னை
தூயானை தூவெள்ளை
யேற்றான் தன்னை
சுடர்த்திங்கட் சடையானைத்
தொடர்ந்து நின்றென்
தாயானை தவமாய
தன்மையானைத்
தலையாய தேவாதி
தேவர்க்கென்றும்
சேயானைத் தென்கூடற்றிரு
வாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப்
பெற்றேனனே.

— திருநாவுக்கரசர்.




மூன்று சகோதரிகள் பெண்களின் மூன்று முக்கிய பிரச்சினைகள்பற்றி ஆராய்ந்து விளக்கம் தந்திருக்கிருர்கள். உடலைப் பேணுவதன் அவசியம்பற்றியும் சிக்கனம்பற்றியும் மணப் பெண்ணுக்கு புத்திமதியும் கூறியிருக்கிருர்கள். தெரிந்துகொள்ளவேண்டியவைகளே. உங்களிடமும் தெரிவிக்கவேண்டிய பல விஷயங்கள் இருக்கும். மற்ற சகோதரிகள் அறிய வேண்டும் என்ற ஆவல் இருக்கும். எழுதுங்கள்.

# சிறந்த மனைவியாக வாழ்வதெப்படி?

—திருமதி செல்வா தனராஜ்—

அன்புத் தங்கை தங்கத்திற்கு,

உன் கடிதம் கண்டேன். களிப்படைந்தேன். இன்னும் சில மாதங்களில் மனைவி என்ற மகத்தான ஸ்தானத்தையடையப்போகிருய் என்பதை அறிந்ததும் மிகவும் மகிழ்ந்தேன். என்னல் அள்ளி அணைக்கப்பட்டு என் தோளில் தவழ்ந்து விளையாடிய அன்புத் தங்கை அல்லவா நீ! ஆகவே உனக்குச் சில சிறந்த அறிவுரைகளைக் கூறுவது எனது கடமையென எண்ணுகிறேன். நீயோ படித்தவள்; பண்புள்ளவள். ஆனல், அனுபவமற்றவள். ஆகவே எனது அறிவுரை உனக்கு குடும்பம் என்னும் படகை எவ்விதம் ஓட்டவேண்டும் என்ற பாடத்தைக் கற்றுக்கொடுக்குமென நம்புகிறேன்.

போதுமென்ற மனமே பொன்செய் மருந்து. இதுவே ஒரு குடும்பப் பெண்ணின் இலட்சிய வாக்காக இருக்க வேண்டும். 'அது இல்லை, இது இல்லை' என்று எப்போதும் உன் கணவனிடம் குறைபட்டுக்கொண்டிராதே. அடுத்த வீட்டுப் பங்கஜத்தையும் அல்லியையும் பார்த்துவிட்டு அவளிடம் இருப்பதுபோன்று உன்னிடம் ஆடைகள் இல்லையே, அணிகள் இல்லையே என்று கணவனிடம் நச்சரித்தவாறு இராதே. "அவள் கணவனைப் பாருங்கள்; அவன் எப்போதும் காரிலே போகிருன், வருகிருன். தன் மனைவியை எப்போதும் சினிமாவுக்கு அழைத்துச் செல்லுகிருன். நான்தான் எப்போதும் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கிறேன்" என்று கணவனிடம் அலுத்துக்கொள்ளாதே. உன் கணவன் வேறு நீ வேறல்ல. உன் குடும்பம் செழிக்கவே அவன் தன் செலவுகளைக் குறைக்கலாம். கடன்படா வாழ்க்கை வாழவே அவன் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம். ஆகவே உனது கடமை, போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்ற மகத்தான வாக்கியத்தை உன் குடும்ப வாழ்வில் கடைப்பிடிப்பதே. இப்படிச் செய்து வருவதால்தான் நீ உன் வருங்கால வாழ்க்கையை மகத்தான வாழ்க்கையாக்க முடியும்; உன் கணவனின் மனதைக் கவர முடியும்.

உன் கணவன் அலுவலகத்தால் களைத்துவிழுந்து வரும்போது வீட்டிலுள்ள குறை நிறைகளைக் கூருதே. அடுப்பங்கரையில் உப்பில்லை, புளியில்லை, கறியில்லை; பாற்காரன், மீன்காரன், கடன்காரன், காசுக்கு வந்தான் என்ற கதைகளை அவர் களைத்து வீட்டுக்கு வரும் நேரம்பார்த்துச் சொல்லாதே. இந்த வழக்கம் அநேக தமிழ்ப் பெண்களிடம் காணப்படுவதொன்று. இதை நீ களைந்தெறியவேண்டும். கந்தோரால் களைத்துவிழுந்து கணவன் வரும்போது அவன்முன் அலங்கோலமாய் அவலட்சணமாய் காட்சியளியாதே. மாலை நேரம் மணாளன் வரப்போகும் நேரமென அறிந்ததும் முகத்தை அலம்பி துப்புரவான ஆடையணிந்து தலைவாரிப் பூச்சூடி மலர்ந்த முகத்துடன் அவனை வரவேற்கவழிமேல்விழி வைத்திரு. இந்ததவறையும் இன்றைய பெண்கள் அநேகர் செய்கிருர்கள். இது வருந்தத்தக்கது. கணவன் வீடுவந்து இளைப்பாறும் நேரம்பார்த்து அடுக்களைக்குப் போவதை நிறுத்திவிடு. அன்புக் கணவனுடன் நாலு வார்த்தை அன்பாகப் பேச வேண்டிய நேரம் அது. அந்நேரத்தில் அடுப்போடும் நெருப்போடும் போராடிக் கொண்டிருப்பது உசிதமல்ல. மனங்களைத்து வந்த மணாளனை மகிழ்ச்சிப் படுத்துவதற்கு உனது அன்பின் உரையாடலே தேவை. ஆகவே சமையல்கட்டு வேலை எதுவானலும் நேரத்தோடு அவற்றையெல்லாம் முடித்துவிட்டு கணவன் வரவிற்காகக் காத்திரு. இப்படிச் செய்வதால்தான் நீ உன் கணவனின் அன்பைப் பெற முடியும் அவனை வீட்டோடு உன் அன்புப் பிணைப்புக்குள் வைத்திருக்க முடியும். இல்லையேல் அவன் கிளப்புகளுக்கும் களியாட்டங்களுக்கும் போகத் தலைப்பட்டுவிடுவான். இந்தக் காலத்துப் பெண்களில் அநேகர் கணவன் வீடு திரும்பும்போது வீட்டிலேயே இருப்பதில்லை. இப்படிப்பட்ட மனைவிமாரால் குடும்ப சமாதானம் குலைகிறது. அடுத்ததாக, நீ உனது வேண்டுகோள்களை முதலில் விடுக்காதே. உதாரணமாக ஓர் சினிமாவிற்கோ அல்லது ஏதும் வெளியூர்ப் பிரயாணத்திற்கோ அல்லது ஏதும் களியாட்டங்களுக்கோ போக வேண்டுமானல் முதலில் அவர் உன்னை அழைக்கட்டும். அவர் அழைக்கும்போது இல்லையென்று சொல்லாதே. உண்மையிலேயே உனது உடல் நலக்குறைவாலோ அல்லது வேறு வசதியீனங்களினலோ போக முடியாது என்று கண்டால் ஒழிய அவர் கூப்பிடும்போது போகாதுவிடாதே, உனது அபிலாஷைகளை வேண்டுகோள்களை விடவேண்டிய நேரம் எது தெரியுமா? இரவில் இருவரும் உணவருந்திவிட்டு சற்று இளைப்பாறிக் கதைத்துக் கொண்டிருப்பீர்களல்லவா? அந்தச் சமயத்தில்தான் உங்கள் குடும்பப் பிரச்சினைகள் அலசி ஆராயப்பட வேண்டும். இதுவே சிறந்த மனைவியின் சாமர்த்தியம்.

இன்னும் சில சில்லறை விஷயங்களைக் கூறி எனது கடிதத்தை முடிக்க விரும்புகிறேன். உணவு விஷயம் முக்கியமானது. உனது கணவனுக்குப் பிடித்தமான உணவு வகைகள் எவை என்பதை முதலிற் தெரிந்து கொள். அவர் அவற்றைச் செய்து தரும்படி வாய்விட்டுக் கேட்க வைத்துவிடாதே. அவரே ஆச்சரியப்படும் வண்ணம் அவற்றைச் செய்து கொடுத்துவிடு. இதன்மூலம் நீ அவரின் இதயத்திலேபெரிய இடத்தைப் பிடித்துக்கொள்வாய். எப்போதும் கணவனுடன் குடும்பக்கதைகளை மட்டும் கதைத்துக் கொண்டிராதே. அவருக்குப் பிடித்தமான அரசியல், சினிமா, கலை, விளையாட்டு சம்பந்தமான உரையாடல்களில் ஆவலோடு கலந்து கொள். அவர் கூறும் கருத்துக்களை ஆவலோடு கேள். வீணை வாதங்களில் தலையிட்டு விடாதே. அரசியலிலோ அல்லது வேறு பிரச்சினைகளிலோ நீ மாறுபட்ட கருத்துடையவளாக இருக்கலாம். ஆனல் அதை உன் கணவனேடு மாத்திரம் விவாதிப்பதை நிறுத்திவிடு.

வீட்டையும் அதன் சுற்றுப்புறங்களையும் கண்கவரக்கூடிய விதமாக சுத்தமாக வைத்திரு. உன் கணவன் உன்னைப் பார்த்து, "இங்கே அழுக்கு, அங்கே அழுக்கு; இவற்றையெல்லாம் துப்பரவு செய்துவிடு" என்று கூறுவதற்கு இடம் வைத்து விடாதே. இதைற் கூட உன் கணவனை நீ மகிழ்விக்க முடியும் என்பதை மறந்து விடாதே. எங்கேயும் தனித்துக்கிளம்புவதை எவ்வளவு குறைக்கமுடியுமோ குறைத்துக்கொள். இதனல் உன் பேருக்கு இழுக்கு ஏற்படவும் கூடும். உன் கணவனும் அதை விரும்பவே மாட்டார். ஆனல் உன் கணவன் வாயால் "இப்படிப்பட்ட போக்கு வரவுகளை நிறுத்திவிடு" என்று கூறும்படி வைத்து விடாதே.

இச் சிறிய அறிவுரைகளே உன் ஆரம்ப குடும்ப வாழ்க்கைக்குப் போதுமானவை என எண்ணுகிறேன். இவற்றை கவனமாகக் கடைப்பிடித்து வந்தாலே போதும். அதுவே உன்னை ஓர் சிறந்த மனைவியாக்கி விடும்; மணாளன் மனங்கவர்ந்த மங்கையாக்கி விடும். உன் குடும்பத்தில் ஓர் ஒளி விளக்காக நீ திகழ்வாய்.

இங்ஙனம்,
உன் அன்பின் அக்கா.

# உடலைப் பேணுவது தவறு?

—தனலக்ஷ்மி—

பெண்கள் தமது உடலைப் பேணிக் காப்பாற்றுவதில் அக்கறைகாட்டினல் அதைக் குறை கூற இன்று சில ஆண்கள் முற்பட்டுவிடுகிருர்கள். ஏன் வயதுசென்ற சில பெண்கள் கூட, 'அப்பா இந்த உடலைப் பேணுவதில்தான் இவர்களுக்கு எவ்வளவு அக்கறை' என முகத்தைச் சுழித்துக் கொள்கிருர்கள்.

பெண்கள் தமது இளமையைப் பேணிக் காப்பாற்றுவது தவறல்ல. அது அவசியமும் கூட. அதற்காக வேறு கடமைகளை மறந்து ஒரேயடியாகத் தமது உடலில் அக்கறைகாட்ட வேண்டுமென நான் கூறவில்லை.

'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்'. இது பழமொழி. இளமை இருந்தால்தான் மலர்ச்சி, மகிழ்ச்சி இருக்கும். இல்லத்தைக் காப்பாற்றும் இல்லாளுக்கும் முக மலர்ச்சி இருந்தால்தான் அகத்தில் மலர்ச்சி இருக்கும், இல்லறம் நல்லறமாக நடைபெறும். இதை பெண்கள் எல்லோரும் உணரவேண்டும்.

இனியென்ன, கல்யாணம் செய்தாகிவிட்டது என்று இன்று நம் நாட்டில் பல பெண்கள் தமது உடலைப் பேணுவதில்லை. இதன்பயனக அவர்கள் அதி விரைவில்

(7ம் பக்கம் பார்க்க)

# ஆடம்பரமற்ற திருமண வைபவம்

—நீலாவதி சின்னப்பு—

இன்று ஆடம்பரமான எத்தனையோ வைபவங்களைக் காணத்தான் செய்கின்ருேம். எண்ணற்ற சிக்கல்கள் நம் முன்னே சிக்கிக் கிடக்கும் போது நாம் இச் சிக்கல்களை அவிழ்க்க, வழிவகுக்கக் காணேம். ஆனல் வீண் செலவுகளில் இருக்கும் விருப்பம் இன்னும் குறையவில்லை பொருளாதாரப் பிரச்சினை நம்மை வதைக்கின்றது. இவைகளை எந்நாளும் படிக்கின்ருேம்; கேட்கின்ருேம். அவை மட்டுமா? இவற்றினை எடுத்து சர்ச்சை செய்யவும் நாம் மறந்ததில்லை. ஆனல் இவற்றுக்குத் தீர்வு காண முயலுகின்ருேமா?

இன்றுடன் அன்றைய வழக்கத்தினை ஒப்பிடும்போது இன்று நாம் ஒரு புது உலகாகிய விஞ்ஞான உலகத்தில் வாழ்கின்ருேம் என்பது மறுக்க முடியாத உண்மை. காலத்திற்கேற்ப புதுப்புது வடிவம் தாங்கி உலகத்துடன் ஒவ்வ வாழ்வது நம் கடமை. நம்

(7-ம்பக்கம் பார்க்க)



# ஸ்தலஸ்தாபன சேவை கமிஷன் சட்டம் திருத்தப்படும்

## உத்தரவை மீறும் சபைகள் மீது நடவடிக்கைஎடுக்க அதிகாரம்

கொழும்பு, திங்கள் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் உத்தரவுகளை மீறும் ஸ்தஸ்தாபன சபைகள்மீது ஸ்தலஸ்தாபன மந்திரி தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்றவகையில் ஸ்தலஸ்தாபன சட்டத்தில் திருத்தம் செய்யப்படவிருக்கிறது. மந்திரியிடம் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் புகார் செய்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இப்பொழுதுள்ள சட்டத்தின்படி ஒரு ஸ்தலஸ்தாபன சபையில் நிர்வாக ஊழல், நிர்வாகத் திறமையின்மை நிரூபிக்கப்பட்டால் மட்டுமே அந்த சபைமீது மந்திரி நடவடிக்கை எடுக்கமுடியும்.

ஸ்தலஸ்தாபன சபைகளில் கடமையாற்றும் ஏழாயிரம் ஊழியர்களின் இடமாற்றம் பற்றியும் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றியும் ஸ்தலஸ்தாபன சபைகள் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனைக் கேள்வி கேட்பதால் ஸ்தலஸ்தாபன சபை ஊழியர்களிடத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துவது ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனுக்கு சாத்தியமில்லாது போய்விடுகிறதென்று அரசாங்க வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்தன.

# ஐக்கிய பண்டகசாலை மனேஜர் வேலை நீக்கம்

தெரினியகலை, திங்கள் இப்பகுதியிலுள்ள ஐக்கிய பண்டகசாலையின் மனேஜரும், நிர்வாகக் காரிய தரிசியுமான ஒருவர் முறைகேடான வேலைகளில் ஈடுபட்டதாகப் பல முறை புகார் செய்யப்பட்டதன் காரணமாக கேகாலை மாவட்ட ஐக்கிய பண்டகசாலைகளின் உதவிக் கமிஷனரால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பண்டகசாலையின் மூன்று ஊழியர்கள்,மானேஜர் தங்களை முன்னறிவித்தல் எதுவுமின்றி வேலைநீக்கம் செய்ததாக உதவிக் கமிஷனருக்கு முன்பு முறையிட்டிருந்தனர். பண்டகசாலையில் பலவிதமான முறைகேடான செயல்கள் நடந்திருப்பதாகவும் இவர்கள் முறையிட்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து சங்கக் காரியதரிசிக்கு சென்ற செப்டம்பர் 11-ந் திகதி விசாரணை நடைபெறுமட்டும் மனேஜரை தற்காலிக வேலைநீக்கம்செய்யும்படி உதவிக்கமிஷனர் அறிவித்திருந்தார். இவ்வறிவித்தலின் பிரகாரம் மனேஜர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படாததால் உதவிக் கமிஷனர் ஒரு விசாரணை நடத்தினர்.

அந்த விசாரணையின் போது பின்வரும் விபரங்கள் தெரியவந்தன:-

1. மாலைதீவு மீன், கருவாடு, பருப்பு, புளி போன்ற கட்டுப்பாட்டுப் பொருட்களை அரிசிப் பங்கீட்டுப் புத்தகக் காரருக்கு வழங்காமல் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கியது. ஒரு பை கருவாட்டை தனிப்பட்ட ஸ்தாபனம் ஒன்றிற்கு 50 ரூபா லாபத்துடன் விற்பனை செய்தது.

2. சங்கத்தின் பணத்தை தமது தனிப்பட்ட தேவைக்கு எடுத்துக்கொண்டது. சங்கப் பணத்தை வட்டிக்குக் கொடுத்தது; இதனுல் சங்கம் எதுவித லாபமுமடையவில்லை.

3. 1000 ரூபா வரையான மூன்று ஊழியரின் மூன்று மாதச் சம்பளத்தை வழங்காது விட்டது.

4. 35 பேர்களுடைய அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்திலிருந்து கூப்பன்கள் வெட்டப்படும். அதற்குரிய அரிசியை அவர்களுக்கு வழங்காது விட்டது.

5. தனிப்பட்ட முறையில் தான் செய்து கொண்ட ரூ 6,504-20 பெறுமதியான கட்டட ஒப்பந்தத்தில் நஷ்டமேற்பட்ட போது, நஷ்டத்தைச் சங்கத்தின் மீது சுமத்தியது.

மனேஜரையும் நிர்வாகக் கமிட்டியையும் அம்மூன்று ஊழியர்களின் 3 மாத சம்பளத்தை வழங்கும்படியும், மனேஜரை கட்டிட ஒப்பந்தத்தால் ஏற்பட்ட நஷ்டத்தை சங்கத்திடம் ஒப்புவிக்குமாறும் உதவிக் கமிஷனர் தற்போது உத்தரவிட்டுள்ளார்.

## திருமலையில் கோவை மடாதிபதி

திருமலை, செவ்வாய் கோவை கௌமரா மடாலய மடாதிபதி தவத்திரு வித்துவான் சுந்தரசுவாமிகள் தலைமையில் 11 பேர் இலங்கை வந்து சேர்ந்துள்ளனர்.

இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில் சமய உணர்ச்சி வெகுவாக அதிகரித்துள்ளதென்றும் இங்குள்ளோரின் விருந்தோம்பல் பண்பு வெகுவாகத் தங்களைக் கவர்ந்துள்ளதாகவும் சுந்தரசுவாமிகள் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## திருமலை சிவயோக சமாஜம்

திருக்கோணமலை, செவ்வாய் திருமலை சிவயோக சமாஜ ஆச்சிரமத்தின் 3-வது ஆண்டு நிறைவு விழா அண்மையில் ஆச்சிரமத்தில் திருமலைப் பிரதிநிதி திரு. இராசவரோதயம் தலைமையில் கொண்டாடப்பட்டது. தலைவர் தனது தலைமையுரையில் சமயவாழ்வு ஒன்று தான் இந்நாட்டு மக்களை நல்ல மனிதராக்கும் சக்தி வாய்ந்தது என்ருர். வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ந. சிவராசா மற்றும் பலர் பேசினர். புதிய வருட நிர்வாகிகள் பின்வருமாறு:-

தலைவர்: திரு. எஸ். சுப்பிரமணியம், உபதலைவர்கள்: திரு. மு. கோ. சங்கரதாஸ், திரு. ஐ. சரவணமுத்து. செயலாளர்: திரு. இ. வடிவேலு, பொருளாளர்: திரு. எஸ். நவரத்தினம்.

## மன்னர் கோஷ்டி வெற்றி

மன்னர், செவ்வாய் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்று சென்சேவியர்ஸ் மைதானத்தில் அநுராதபுரக் கோஷ்டியினருக்கும் மன்னர் கோஷ்டியினருக்கும் நடைபெற்றது. மன்னர் கோஷ்டியினர் 5 - 2 கோல்களால் அநுராதபுரக் கோஷ்டியினரை வெற்றி கொண்டனர். திரு. ஜே. எஸ். பொன்ராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சிருப்பருக்கு பிரிவுபசாரம்

மன்னர், செவ்வாய் தலைமன்னரிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் சிருப்பராகக் கடமையாற்றிய திரு. வி. கந்தப்பு கொழும்புக்கு மாற்றலாகிச் செல்வதையிட்டு அவருக்கு ஒரு பிரிவுபசாரமளிக்கப்பட்டது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00) புதன், 9-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செக்கோஸ்லேவேகிய தேசியதின நிகழ்ச்சி.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 செல்லமணி செல்லையா—வயலின், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விவாதமேடை, 9-45 தொகுப்பிசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சி. மதனகோபால்—வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 வி. வி. வரதராஜன்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சமூகநலம்: சித்திரம், 7-45 'பேராசை'—நாடகம், 8-00 சி. மதனகோபால்—வீணை, 8-30திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-20 லயவின்யாசம், 9-50 இசைமாலை.

## ஆடம்பரமற்ற....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவைக்கேற்ப நாம் நமது செலவுகளைக் கட்டுப்படுத்தி வாழப் பழகிக்கொள்ளாவிடில் துரித வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் உலகோடு ஒத்து வாழ முடியாது போய்விடும் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஒரு நாளிலேயே தமது பெருமையைச் சகலருக்கும் அறியப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டே இன்று பெரும்பாலோர் திருமண வைபவங்களை ஆடம்பரமாக நடத்துகின்ருர்கள். எல்லோரும் வருகிருர்கள்; விருந்து உண்கிருர்கள்; போகிருர்கள். அத்துடன் திருமண வைபவம் முடிந்துவிடுகிறது. ஆனுல் பின்னர் தொடர்வதென்ன? கடன் தொல்லைதான். இது விஷயத்தில் கைகொடுத்து உதவ வரக்கூடியவர்களின் தொகை விரல் விட்டெண்ணிவிடலாம். ஒரே நாளில் நமது போலிக் கௌரவத்தை விளம்பரப்படுத்திச் சம்பாதிக்கக் கூடியது இதுதான். அதுமட்டுமல்ல, கல்யாண வீட்டுக்கு வந்து நம் பெருமையைக் கண்டு வாய் விட்டு வாழ்த்துரை கூறியவர்கள்கூட இப்படி ஏன் தேவையில்லாமல் செலவழித்து நஷ்டமடைந்து தெருவில்நிற்கவேண்டும் என அறிவுரை கூறுவார்கள்.

இதையெல்லாம் உத்தேசித்து நாம் நமது பிற்கால வாழ்வையும் கௌரவத்தையும் காப்பாற்றும் பொருட்டு இந்த நல்ல வைபவங்களில் சிக்கன முறையைக் கையாள வேண்டும். நம் பெருமையை (நமக்காக) நம் முன்னே கூறும் எல்லோரும் நம் கஷ்ட நிலையில் உதவிக்கு வருவார்கள் என உறுதி கூற முடியாது. எனவே நமது நல்வாழ்வுக்காக நம் வீடுகளில் நடைபெறும் திருமண விழாக்களைச் சிக்கனமாகவும் நல்ல முறையாகவும் கொண்டாட வேண்டியது அவசியம்.

## உடலைப் பேணுவது

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்களாக மாறிவிடுகிருர்கள். அவர்களது மனநிலை குழப்பமடைவதோடு கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைக்கூட அவர்கள் செய்ய முடியாது போய்விடுகிறது. இனிக்கவேண்டிய இல்லறம் கசக்கத் தொடங்குகிறது.முடிவு துன்பந்தான்.

எனவே ஒவ்வொரு பெண்ணும் தனக்கு நோய் வராமல் தடுத்துக் கொள்வதற்காக ஆவது உடலைப் பேணவேண்டும். இளமையைக் காப்பாற்ற வேண்டும்.தமக்கு வயதுசென்று விட்டது என்று தாமே முடிவு கட்டி பின்னர் இளம் வயத்திலேயே முதுமையடைந்துவிட வழியமைத்துவிடக்கூடாது.

இதற்காக எந்நேரமும் தமது உடலைப்பேணி நோய் வராதுஎச்சரிக்கையோடு வாழ எந்த பெண்ணும் நாள் தவரு முயற்சி எடுக்கவேண்டும்.

## இரவல் பொருட்களை விற்ருராம்

### சிறைத்தண்டனை பெற்ருர்

பருத்தித்துறை, செவ்வாய் இரவலாக வாங்கும் பொருட்களை திரும்பக்கொடாது அவர்களை ஏமாற்றுவதுடன் அப்பொருட்களை விற்றுவிடுவதையும் வழக்கமாகச் செய்து வந்ததாகக் கருதப்படும்இளைய தம்பி நடராசா என்பவர் மீது பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட இரு வழக்குகளில் பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கம் எதிரிக்கு ஒரு வழக்கில் 3 மாதமும் பிறிதோர் வழக்கில் 4 மாதமும் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினர்.




ஒரு முறை அருந்தி



என்றும் விரும்பும் நற்பானத்தைப் பெறுங்கள்




அது நற்சுவையில் தலைசிறந்தது: அதன் மேலதிக இனிமையையும், பாலேடையின் சுவையையும், நீங்கள் விரும்புவீர்கள்! வேறெந்த மோல்டட் பாலும் இவ்வளவு சுவையாக இல்லை என்று நீங்களே சொல்வீர்கள்!

அது ஒரு நொடியில் கரைகிறது: ஸல் போட்டவுடன் கரைந்து விடுகிறது! இரண்டு சிறு கரண்டியளவு ஒரு கப் தண்ணீரில் போட்டதும் மிகவும் ருசியான பால் பானம் தயாராகி விடுகிறது!

அது டீ அல்லது கோப்பியின் சுவையை உயர்த்துகிறது: பாலுக்குப் பதிலாக ஸலை உபயோகித்து ஒரு புதிய சுவை இன்பத்தைப் பெறுங்கள்...அது மனக்கிளர்ச்சியூட்டும் அனுபவம்!

அது சிக்கனமானது: முதலாவது அதன் விலை மிக மிக மலிவு. மேலும், உங்களுக்குப் பால் லாபம், சீனி லாபம். எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் ஸல் உங்களுக்கு உற்ற நண்பன்!

ஸலை பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள்

ஸல்

உடன் கரையும் மோல்டட் பால்

குடும்பத்தார் உடன் விரும்புவது

SNT-HLS-2968 —ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

# அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் முதல் மகாநாடு

## சென்னையில் நடைபெறும்

சென்னை, செவ்வாய்

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் முதல் மாகாநாடு மேதாதம் 19-ம், 20-ம் தேதிகளில் சென்னையில் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. பேராசிரியர் திரு. அ. சீனிவாசராகவன் இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார். இந்திய பேரரசின் விஞ்ஞான ஆராய்ச்சி பண்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் ஹுமாயூன்கபீர் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

பிறமொழியில் தமிழ் என்பதுபற்றி தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, வங்காளி அறிஞர்கள் உரைநிகழ்த்துவர். கவியரங்கத்தில் 10 கவிஞர்கள் கலந்து கொண்டு ஒவ்வொருவரும் சென்ற ஓராண்டில் தாம் இயற்றிய கவிதைகளில் சிறந்த ஒன்றைப் படிப்பர். எழுத்தாளர் – பல கோணங்களில் என்பதுபற்றி ரசிகர், பதிப்பாளர், பத்திரிகாசிரியர், விமர்சகர், அச்சகத்தார், எழுத்தாளர் ஆகியோர் எழுத்தாளர்பற்றிய தமது கருத்துக்களை எடுத்துரைப்பர்.

## 26 பேர் கைது

### சட்டவிரோதமாக குடியேறினராம்

மன்னார், செவ்வாய்


தென்னிந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக மன்னார் மாவட்டக் கரையோரங்களில் குடியேறியதாகவும் அவர்களை மன்னார்ப் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிகிறது. பேசாலையில் 10 பேர் கைது செய்யப்பட்டனர். முருங்கன் பகுதியில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். விடத்தற்தீவில் இலுப்பைக் கடவை கரைப்பொலிஸார் 12 பேரைக் கைது செய்தனர்.

இவர்களை மன்னார்ப் பொலிசார் விசாரித்து தலைமன்னார் பாதுகாப்பு முகாமுக்கு அனுப்பியுள்ளனர்.


4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)
நியூசினிமா (குருணகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாண பரிசு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நாகாலந்து விமான விபத்தில் 8 பேர் பலி

புதுடில்லி, மே 8

நாகாலந்தில் விபத்துக்குள்ளான இந்திய டகோடா விமானத்திலிருந்த 8 பேரும் இறந்துபோய்விட்டார்கள் என பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் அறிவித்தார். இந்த விபத்து பற்றி ஆராய ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினார்.

## மந்திரிகள் பதவி ஏற்றனர்

புதுடில்லி, மே 8

புதிதாக நியமிக்கப்பட்ட 2 இராஜாங்க மந்திரிகளும் 8 துணை மந்திரிகளும் இன்று பதவி ஏற்றனர்.

## ராஜன்பாபுவுக்கு பொதுமக்கள் பிரிவுபசாரம்

புதுடில்லி, மே 8

பதவியிலிருந்து விலகும் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத்துக்கு வருகிற வியாழக்கிழமை பொதுமக்கள் அளிக்கவிருக்கும் பிரிவுபசார ஏற்பாடுகள் பூர்த்தியடைந்திருக்கின்றன. இந்த வைபவம் புதுடில்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெறும். ராஷ்டிரபதி பவனிலிருந்து அவர் ஊர்வலமாக மைதானத்துக்கு வருவார். 12 ஆண்டுகள் அவர் பதவியிலிருந்ததற்கு அடையாளமாக வழிநெடுக 12 அலங்கார வளைவுகள் அமைக்கப்படுகிறது. மாலையில் டில்லிமாநகரில் தீபாலங்காரம் செய்யப்படும். டாக்டர் ராஜன்பாபுவுக்குப் பலபரிசுகளும் அளிக்கப்படும்.

புதுடில்லி, மே 8

மால்டா, டாக்கா, ராஜ்ஷாஹி ஆகிய இடங்களில் நடைபெற்ற வகுப்புக்கலவரம் பற்றி தாம் ஒருஅறிக்கை வெளியிடப் போவதாய் பிரதமர் நேருகூறினார்.

## 4 ஜெனரல்கள் பதவி நீக்கம்

சியோல், மே 8

தென்கொரிய ராணுவத்திலிருந்து நான்குஜெனரல்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.


**Notice**

**In the District Court of Jaffna.**

1. Thamotharampillai Vannianathan,
2. and wife Varaledchumy, both of Moolai, Plaintiffs.

No P. 526. Vs.

1. Kathirithamby Subramaniam
2. and wife Maniccam, both of Tellippalai West, and 7 others, Defendants.

It is hereby notified that Action No. P.526 has been instituted in the District Court of Jaffna under the Partition Act No. 16 of 1951, for the partition / sale of the land called Konavalai and situated in the village of Tellippalai west in the Jaffna District.

The defendants in the aforesaid action are summoned to appear in court on the 17th day of october 1961 at 10 o'clock of the forenoon

This 27th day of march 1962

By order of Court,
Sgd. N. Anthonipillai
chief clerk.

This date is extended for the 12th day of June 1962.

Drawn by,
Selvarajah & Mahesan
Proctors for plaintiffs.


## எஸ். எஸ். ஸி..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமெனத் தாம் கூறமுடியாதென்று தெரிவித்தார்.

திரு. பெரிஸ் பெரேராவின் கேள்வி ஒன்றுக்கு திரு. கருணாரத்ன பதிலளிக்கையில் சிங்களத்திலும், தமிழிலும் ஒரு ஆசிரியருக்குத் தேவையான குறைந்த தராதரம் எஸ். எஸ். ஸி. எனக் கூறினார். அரபு ஆசிரியர்களுக்கு விசேஷத்தகுதிப் பரீட்சை ஒன்று இருக்கிறதென்றும் அவர் கூறினார்.

"1956-ம் ஆண்டில் குறைந்த அரபு தராதரம் இல்லாத 56 முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர். முஸ்லீம் ஆசிரியர்கள் பற்றுக்குறையாய் இருந்ததால் இந்த நியமனங்கள் செய்யப்பட்டன" என்றும் அவர் கூறினார்.

இனி எஸ். எஸ். ஸி. சித்தி பெற்ற ஆசிரியர்களிடையே போட்டிப் பரீட்சை நடத்திய பின் தகுதியானவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என கல்வி மந்திரி திரு. பதியுதீன்முகமது கூறினார். பரீட்சை முடிவைத் தொடர்ந்து எஸ். எஸ். ஸி. தகுதிபெற்றவர்கள் பயிற்சிக் கல்லூரிக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும், ஆசிரியர்கள் தேவையாய் இருந்தால் இந்த தகுதி பெற்றவர்களிடமிருந்து பொறுக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

## மூதூர் இடைத்..,

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிடலாம் எனத் தெரிகிறது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் தினம் இம்மாதம் 22-ம் திகதியென குறிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யா அணுசோதனை நடத்தும்!

மாஸ்கோ, மே 8

ரஷ்யா மீண்டும் அணுசோதனையை ஆரம்பிக்கப் போவதாய் மாஸ்கோ ரேடியோ அறிவித்தது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்புச் செயலை எதிர்க்காமல்விடக்கூடாது எனவும் அது அறிவித்தது. ஆனால் சோதனை எப்போது ஆரம்பமாகும் என்பது கூறப்படவில்லை.

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை சிவன் கோவிலில் இன்று காலை பத்து மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். மாலை ஆறுமணிக்கு ஆசிரியர் திரு. ஆறுமுகம் 'பார்வதி கல்யாணம்" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு எட்டுமணிக்கு சுவாமி பூபல்லக்கில் வீதிவலம் வருவார்.

## நேபாளத்திற்கு அரசியல் சாசனம்

காட்மாண்டு, மே 8

நேபாளத்திற்கு புதிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை வரையும்பொருட்டு 6 பேரடங்கிய ஒருகமிஷன் நியமிக்கப் பட்டுள்ளது.

## மாதர்சங்க விழா நடத்த ஏற்பாடு

ஊர்காவற்றுறை, செவ்வாய்

சென்ற சில மாதங்களின் முன் 'அங்குரார்ப்பணம்' செய்யப்பட்ட சரவணை-மாதர் முன்னேற்றச் சங்கத்தின் 'மாதர் சங்க விழா' இம் மாதம் பிற்பகுதியில் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெறவிருக்கிறது.

## புங்குடுதீவில் சங்கீத கதாப்பிரசங்கம்

ஊர்காவற்றுறை, செவ்வாய்

புங்குடுதீவு- மடத்து வெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இம் மாதம் 10-ம் திகதி வியாழக்கிழமை திரு- சீ. விநாசித்தம்பி ஆசிரியரால் 'சிறுத்தொண்டர்' என்னும் சரிதைபற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தப்படும்.

## அரசாங்க பாராளுமன்ற குழு

கொழும்பு, செவ்வாய்

பத்திரிகை மசோதா நகலை ஆராய்ந்து அதன் கொள்கைகளை அரசாங்க பார்லிமெண்டரி குழு இன்று அங்கீகரித்துள்ளது. மசோதா பற்றி விவாதிப்பதற்கான விசேஷ குழுவின் கூட்டம், இம்மாதம் 10-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

## அதிகாரிகள் மன்னிப்பு கோரினர்

கொழும்பு, செவ்வாய்

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். ஏ. திஸ்ஸநாயக்கா (சி. ஐ. டி.), பிரதம சுங்க கலெக்டர் திரு. எம். எல். டி. காஸ்பெர்ஸ் ஆகிய இருவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இனிமேல் எடுக்கப்படமாட்டாதென கடற்படை கமிஷனர் அறிவித்துள்ளார்.

கடற்படை விசாரணை கமிஷனரின் அனுமதியில்லாமல் 'மகாசேனு'வை விட்டுச் சென்றதற்காக, இரு அதிகாரிகளும் கமிஷனரும் 'மன்னிப்புக் கேட்டுள்ளனர். இதுசம்பந்தமான செய்தி நேற்றைய பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

## இந்திய விமானிகள் ஒப்படைப்பு

ரங்கூன், மே 8

நாகர்கள் வசமிருந்த 4 இந்திய விமானிகளை, அவர்கள் திரும்ப ஒப்படைத்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.


## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..........

கல்லூரி ..........

எனது பெயர் ..........

விலாசம் ..........

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.